Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579 - 2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu

www.nimirvu.org

பார்வை - 10 | கார்த்திகை, 2017 | பக்கங்கள் - 28 | விலை - ரூபா 20.00

## அரசியல் கைதிகள் போராட்டம்

## இனி?



இழந்த கல்வியை மீட்டெடுப்பதற்கான பரிகார நடவடிக்கைகள்

சர்வதேச சந்தையில் தாயகத்து முருங்கை இலை

13 இற்கு வயது 30

ஆராயும் அறிவே நிமிர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சந்தையில் முருங்கை இலை

## தாயகத்தில் சாதிக்கும் முயற்சியாளர்

உழைப்பால் உயர்ந்தவர்கள்




தீசன்

யாழ்ப்பாணத்தில் சங்கரப்பிள்ளை நகுலேஸ்வரன் இன்று ஒரு வெற்றிகரமான சிறுதொழில் முயற்சியாளராக விளங்குகின்றார். ஆங்கிலப் புலமை உள்ளவராகவும் தொழில் துறையில் தேர்ச்சி பெற்றவராகவும் இருக்கிறார். எங்கள் தேசத்தின் வளங்களை உச்சமான முறையில் பயன்படுத்த வேண்டும் என்கிற விருப்புடையவர். புதிய விடயங்களை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுக்கும் ஆர்வம் உள்ளவர். அவரது அனுபவமும், வயதும், பக்குவமும் அவர் பேச்சில் தெரிகிறது. Nutri food packers எனும் நிறுவனத்தை கிளுவானை வீதி, கோப்பாய், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஆரம்பித்து வெற்றிகரமாக நடாத்தி வருகிறார்.

தொழில் முயற்சியாளர் சங்கரப்பிள்ளை நகுலேஸ்வரன் சொல்வதைக் கேட்போம். நான் பிறந்த மண் கொல்லங்கலட்டி தெல்லிப்பளை. காங்கேசன்துறை இராணுவ முகாமுக்கு அருகில் எங்களது வசிப்பிடம் அமைந்திருந்த காரணத்தினால் 1990 இலேயே வீட்டை விட்டு இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. 1995 வரையும் வலிகாமம் மேற்குப் பகுதிகளான சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேசங்களில் நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் தற்காலிகமாக வாழ்ந்து வந்தோம். பின்னர் 1995 இல் குடாநாட்டு இடப்பெயர்வு. அதனைத் தொடர்ந்து 2009 வல்ரயும் வன்னிப் பெருநிலப்பரப்பில் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் வாழ்ந்து வந்தோம். யுத்தகாலத்துக்கு முந்தைய என்னுடைய கடந்த காலத்தில் அரியாலையில் உள்ள பழவகைகளை பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் நிறுவனத்தில் உற்பத்தித்துறை சார்ந்த பொறுப்பில் வேலை செய்தேன். பின், அச்சுவேலி கைத்தொழில் பேட்டையிலும் கடமையாற்றினேன். அதன் பிற்பாடு இடப்பெயர்வுடன் வன்னியில் சிறுவர் பாதுகாப்பு நிறுவனமொன்றில் மாவட்ட முகாமையாளராகவும் கடமையாற்றினேன்.

இறுதியுத்தத்திற்கு பிறகு யாழ்ப்பாணம் திரும்பிய பிற்பாடு கடந்த கால அனுபவங்களையும் வைத்து நாங்கள் ஏன் சொந்தமாக தொழில் தொடங்கக்கூடாது என்கிற சிந்தனை ஏற்பட்டது. அதற்கு எனது மகளும் உதவிக்கரமாக இருந்தார்.

எனது மகளுடன் இணைந்து ஒரு குடும்ப வியாபாரம் போல் தான் சிறு உற்பத்தி முயற்சிகளை 2015 நவம்பரில் ஆரம்பித்தோம். பழங்கள், மரக்கறிகளை நீரகற்றி உலர்த்தி பதனிடும் முறையை நாங்கள் கையாள்கின்றோம். இப்பொழுது முருங்கை இலை மா, இராசவள்ளி மா, பாவற்காய் வற்றல், பாவற்காய் வடகம், வேப்பம்பூ வடகம் ஆகியவற்றை தயாரித்து வருகிறோம். இவற்றைப் பொதி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறோம். 2016 இல் இடம்பெற்ற யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் எமது உற்பத்திப் பொருட்களை பார்வைக்கு வைத்து இருந்தோம். அந்த நேரத்தில் தான் ஏற்றுமதிக்கான சில தொடர்புகளும் கிடைத்தன. நேரடியாக ஏற்றுமதியில் ஈடுபடாவிட்டாலும் ஏனைய முகவர்கள் ஊடாக ஏற்றுமதியை மேற்கொண்டு வருகின்றோம்.

முருங்கையினுடைய எல்லாப் பகுதிகளுமே அதிகளவு ஊட்டச்சத்து நிறைந்தவையாகும். எங்களின் எல்லோரின் வீடுகளிலும் முருங்கை மரம் இருக்கிறது. பெரும்பாலும் முருங்கைக்காயைத் தான் கறித் தேவைகளுக்கு பயன்படுத்தி வருகின்றோம். ஆனால் முருங்கை இலையின் மகத்துவத்தை பெரிதாக யாரும் உணரவில்லை. நாங்கள் முருங்கை இலைகளை Yarl herbs export என்கிற நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்து உலர்த்தி பதனிட்டு மாவாக்கி சுகாதாரமான முறையில் பொதியிட்டு சந்தைப்படுத்துகிறோம். வெளிநாடுகளில் இதற்கு நல்ல கிராக்கி உள்ளது. புட்டு, இடியப்பம் அவிக்கும் மாவுடன் முருங்கை இலை மாவையும் கலந்து விநியோகிக்கும் திட்டம் ஒன்றை நிறுவனமொன்று இங்கு ஆரம்பிக்க இருக்கிறது. ஆப்பிரிக்காவில் குழந்தைகளின் போசனைப் பெறுமானத்தை அதிகரிக்க கோதுமைமாவுடன், முருங்கை இலை மாவைக் கலந்து உபயோகப்படுத்துகிறார்கள். முருங்கை இலையில் புட்டு அவிக்கும் நடைமுறை இங்கே நிறைய காலமாக இருக்கிறது. அன்னியச் செலாவணியை பெருமளவில் ஈட்டக் கூடிய ஒரு தொழில் துறையாக வளரக் கூடிய சாத்தியத்தை இது கொண்டுள்ளது. இது தொடர்பில் எங்களது விவசாய திணைக்களங்களோ சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்களோ அக்கறை செலுத்துவதாக தெரியவில்லை. இன்னும் இங்கு ஏராளமான உணவுப்பொருட்கள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பரணீதரன்



கூடிய நிலையில் இருக்கின்றன. அதன் மூலம் எம் மக்களின் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்ய முடியும்.

பாகற்காயை வற்றல் போட்டு பெருமளவு ஏற்றுமதி செய்ய முடியும். இவற்றுக்கு வெளிநாடுகளில் நல்ல மதிப்பு உண்டு. கடந்த வருடம் சந்தையில் நியாயமான அளவு பாகற்காய்களை 60 ரூபாவிற்கும் 80 ரூபாவிற்கும் இடையில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. ஆனால் இம்முறை எதிர்பார்த்த உற்பத்தி இல்லாமையால் சந்தையில் பாவற்காய் விலை சராசரியாக 160 ரூபாயாக இருந்தது. இதனால் பாவற்காயை உலர்த்திப் பெறும் வருவாயை விட பாவற்காயை கொள்வனவு செய்யும் விலை அதிகமாக இருந்தமையால் இந்த ஆண்டு பாவற்காயை கொள்வனவு செய்ய முடியவில்லை. இதனால் தொடர்ச்சியாக உலர்த்துவதற்கு பாவற்காயை பெற்றுக் கொள்வது சிரமமாக உள்ளது. தொடர்ச்சியான கிடைப்பனவு இல்லாதது எமது தொழிலுக்கு பெரும் பின்னடைவாக உள்ளது. பருவகாலநிலை மாற்றம், வரட்சி, பீடைகளின் தாக்கம் காரணமாக விவசாயப் பொருள் உற்பத்தி இவ்வாண்டு வீழ்ச்சி அடைந்துள்ளது.

வேப்பம்பூ வடகம் போன்ற பாரம்பரிய உணவு வகைகளையும் தயாரித்து வருகிறேன். பாகற்காய் வடகத்தை இங்கே அறிமுகப்படுத்தி அது நல்ல சந்தை வாய்ப்பை பெற்றுக் கொண்டுள்ளது. மோர் மிளகாய்க்கும் நல்ல சந்தை வாய்ப்பு உள்ளது. ஆனால் இந்த ஆண்டு மிளகாயின் விலை மிகவும் உச்சமாக இருந்தபடியால் மோர்மிளகாயையும் உற்பத்தி செய்ய முடியவில்லை.

பொலிக்னைட் சீட்டினால் (வெப்பத்தை விரைவாக கடத்தி தக்க வைத்திருக்கும் ஒரு வகை மேற்கூரை) சுற்றி மூடப்பட்ட அறையில் வைத்துத் தான் முருங்கை இலைகள், பாவற்காய்கள், இராசவள்ளிக்கிழங்குகள் உலர்த்தப்படுகின்றன. சூரிய சக்தியின் மூலம் இவற்றை திறம்பட உலர்த்த முடியும்.

இப்பொழுது எங்கள் தொழிலில் உள்ள பிரதான சவால், உற்பத்தி மூலப் பொருட்களை தடையற்ற விதத்தில் தொடர்ச்சியாக பெற்றுக் கொள்ளும் பொறிமுறையை உருவாக்குவது தான். வரட்சியுடன் கூடிய காலநிலையை எதிர்கொண்டு மரக்கறி உற்பத்திகள் குறிப்பாக பாவற்காய் உற்பத்தியை மேற்கொள்ளும் நோக்கில் பசுமைக் குடில்களை அமைத்துள்ளேன். கிளிநொச்சியில் 2 ஏக்கர் காணியை வாங்கி அங்கும் பயிரிடும் நோக்கில் உள்ளேன்.

இவை எமது விவசாயிகளுக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கும் என நினைக்கிறேன். எவ்வளவுக்கெவ்வளவு தொழிநுட்பங்களும் இவ்வாறான முயற்சிகளும் பரவலடையுதோ அவ்வளவுக்கவ்வளவு எமது தேசத்தின் உற்பத்தி அதிகரிக்கும்.

சந்தை விலை ஏற்றத்தாழ்வு, பருவகாலம் சீரின்மை, நிலையான வழங்கல் இல்லாமை தான் எதிர்நோக்கும் பிரதான சிக்கல்களாக உள்ளன. இஸ்ரேல் நாட்டவர்கள் பாலைவனமே தங்களுக்கு ஒரு வளம் (desert is a resource) என்கிறார்கள். விவசாய ஆராய்ச்சிகளும், விவசாய வணிகமும் ஒரே தண்டவாளத்தில் செல்லும் ரயில் மாதிரி கைகோர்த்து பயணிக்கும் போது தான் பொருளாதாரத்தில் மேன்மை நிலையை அடையலாம்.

ஆனால், இங்கு விவசாய ஆராய்ச்சிகள் ஒரு நிலையிலும் விவசாய வணிகமும், அபிவிருத்தியும் இன்னொரு நிலையிலும் உள்ளன. இங்குள்ள அரச நிறுவனங்கள் பெரிதாக விவசாய வணிகத்தை முன்னெடுக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதாக தெரியவில்லை. அண்மையில் தாய்லாந்துக்கு சென்று வந்தேன். அங்கு பனம்பொருள் உற்பத்தி மிகவும் விஞ்ஞானபூர்வமான தயாரிப்புடன் மேற்கு நாடுகளுக்கு பெருமளவில் ஏற்றுமதியாகிறது. அதுவும் பனையில் இருந்து பலவகையான பொருட்கள். பார்க்க ஆச்சரியமாக இருந்தது. தாய்லாந்தில் உள்ளூர் மூலப்பொருட்களான மூங்கில்களை வைத்து பசுமைக்குடில்களை சிறப்பான முறையில் அமைத்து உள்ளார்கள். இந்தியாவில் பசுமைக்குடில்களை அமைப்பதற்கு சவுக்கு மரத்தைப் பாவிக்கின்றார்கள்.

தென்னிலங்கையை பொறுத்தவரையில் ஒரு முயற்சியாளரின் வளர்ச்சிக்கு வங்கிகள், நிறுவனங்கள் என்று எல்லாமே நன்றாக துணை புரிகின்றன. எங்கள் பகுதிகளில் அந்த நிலை இன்னும் வரவில்லை. அவர்களோடு ஒப்பிடும் போது நாங்கள் மிகவும் பின்தங்கியே இருக்கின்றோம். பழ அபிவிருத்தி சபை சிறிமாவின் காலத்தில் இருந்தது. இங்கிருந்து மாம்பழங்களும் பெருந்தொகையில் ஏற்றுமதியானது. அந்த நிலை திரும்பவும் வர வேண்டும்.

எங்களது உற்பத்திப் பொருட்களை உள்ளூரில் விநியோகம் செய்வது கொஞ்சம் கடினமாகவுள்ளது. எங்களுடைய பொருட்களின் விற்பனைக்கு யாழில் உள்ள TCT நிறுவனம் பெருமளவு உதவி செய்கிறது. எனது பொருட்களுக்கு மட்டுமல்ல உள்ளூர் உற்பத்தியாளர்கள் பலருக்கும் சந்தைவாய்ப்பை அந்நிறுவனம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.

எமது பிரதேசத்தில் கூட்டு முயற்சிக்கான பரந்த தளத்தை உருவாக்க வேண்டியுள்ளது. இளம் தொழில் முயற்சியாளர்கள் எம் பகுதிகளில் புதிதாக உருவாகி வருவது மகிழ்ச்சியளிக்கிறது. இந்நிலை தொடர வேண்டும். சரியான விலையில் மூலப்பொருட்களை பெற்று தொடர்ச்சியாக உற்பத்திகளை மேற்கொள்ளும் நிலைக்கு நாங்கள் வளர வேண்டும். அப்போது தான் சர்வதேச சந்தையிலும் ஒரு ஸ்திரமான நிலையை தக்கவைக்க முடியும் என்றார்.

தொடர்புக்கு : 0766289170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல் : nimirvueditor@gmail.com
இணையம் : www.nimirvu.org
தொலைபேசி இல : 021 223 2121

## ஆசிரியர் பார்வை

# மாவீரர் நாள் : முதலில் சரியான ஒழுங்கமைப்பு தேவை

தமிழர் தாயகத்தில் இடம்பெறும் நினைவு கூரல்களில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும், மாவீரர் நாளும் முக்கியமானவை.

தமிழர்களுக்கான தேசம் ஒன்றை அமைக்கும் பெருங்கனவுடன் வித்தாகிப் போன ஆயிரமாயிரம் இளையோரின் கல்லறைகளுக்கு தீபமேற்றி மலர் தூபி வழிபடுவதையும் தாண்டி அன்று தமிழ் மக்கள் இனி என்ன செய்ய வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொள்ளும் நாளாகவும் அந்த நாள் அமைய வேண்டும்.

தாயகக் கனவோடு பல்வேறு அமைப்புக் களிலும் இணைந்து விடுதலைக்காகப் போராடி தம் தலைமைகள் விட்ட தவறுகளால் வீழ்ந்து போன மாவீரர் அனைவருக்கும் அஞ்சலி செலுத்தும் நாளாக இது அமைய வேண்டும். இது தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் இன்றும் உணர்வு பூர்வமாக முன் வைக்கப்பட்டு வருகின்றன. அவை ஒருபுறமிருக்க, எமது விடுதலைக்காக மாய்ந்து போன இவ்வீர மறவரின் நினைவுநாளை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதைப் பற்றி ஆராய்வதே இப்பத்தி யின் நோக்கம்.

தமிழ் மக்கள் மத்தியில் அரசியல், அதிகார மையமொன்று வலுவாக இல்லாததன் எதிர் விளைவை இந்த நினைவு கூரல்கள் 2009க்குப் பின் நன்றாகவே வெளிப்படுத்தி வருகின்றன. தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலு மில்லங்கள் புனரமைக்கப்படுவதில் கூட சில அரசி யல் கட்சிகளிடையே நடக்கும் போட்டிகளைப் பார்த்து மாவீரர் குடும்பங்களை சேர்ந்தவர்களும் தமிழ் மக்களும் விரக்தியடைந்துள்ளனர். மாவீரர் தியாகங்களை சில அரசியல்வாதிகள் தங்களுக் குள் மட்டும் பங்கு போடுவ்து எந்த வகையில் நியாயம் எனவும் அவர்கள் கேள்வி எழுப்பி யுள்ளனர்.

தாயகத்தில் மட்டுமல்ல புலம்பெயர் தேசங் களிலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் ஒரே நாட்டில் நான்கு இடங்களில் எட்டு அமைப்புக்களால் நடாத் தப்படும் சூழல் உள்ளது. தாயக விடுதலைக்காக போராடியவர்கள் இன்றும் இந்த மண்ணில் நிர்க்கதியாக உள்ள நிலையில் ஆடம்பரங்கள், இதற்காக செலவழிக்கப்படும் பெருந்தொகைப் பணம் என்பன முன்னாள் போராளிகளையும் கோபத்தில் ஆழ்த்தியுள்ளது.

“நினைவு கூர்தலை எப்படி ஒழுங்கமைப்பது என்பது தொடர்பில் அரசியல்வாதிகளிடம் சரியான திட்டமிடல் இருக்கவில்லை. இதை இன்னும் கூராகச் சொன்னால் வெகுசனப் போராட்டங்கள் அல்லது வெகுசன நிகழ்வுகள் தொடர்பில் எந்த வொரு தமிழ்க்கட்சியிடமும், எந்தவொரு தமிழ் சிவில் அமைப்பிடமும் சரியான தரிசனம் இல்லை எனலாம். இதில் வயதால் இளையதும் ஆகப் பிந்திய அமைப்புமாகிய தமிழ் மக்கள் பேரவையும் தன்னிடம் அப்படிப்பட்ட வெகுசன அரசியலுக்கான தரிசனம் எதுவும் இருப்பதாக இதுவரையிலும் நிரூபித்திருக்கவில்லை.”

நினைவு கூர்தல் தொடர்பில் தனது கடந்த கட்டுரையொன்றில் அரசியல், சமூக ஆய்வாளர் நிலாந்தன் கூறிய மேற்படி விடயங்கள் அப்படியே இங்கே சரியாக பொருந்துகிறது.

நினைவு கூரல்களை கட்சி சார்பின்றி நடாத்த பொது அமைப்புக்கள் ஒன்று கூடி ஒரு சரியான தீர்மானத்தை எடுக்க வேண்டும். நினைவு கூரலுக்கென ஓர் அமைப்பை நிறுவ வேண்டும். அந்த அமைப்பினூடாக நினை வேந்தல்களை ஒழுங்கமைப்பது தான் சிறப்பான தாக இருக்கும்.

நினைவு கூரல் திட்டமிடல் தொடர்பில் ஏற்கனவே நிமிர்வு இதழில் எழுதியிருந்தோம். தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் தொடர்பாக நமது கட்சிகளிடையே கொள்கை முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் கடந்த காலத்தில் எமது இனத்தின் விடிவுக்காக பல்வேறு ஆயுதப் போராட் டக் குழுக்களில் ஏதோவொரு நம்பிக்கையைத் தம் மனத்தில் சுமந்து கொண்டு இணைந்து தம் இன்னுயிரை ஈர்ந்தவர்கள் மாவீரர்கள். அவர்களை கட்சி முரண்பாடுகளையும் குழு முரண்பாடு களையும் கடந்து நினைவுகூருவதே நாம் செய்ய வேண்டிய கடமையாகும். இதற்கு ஒற்றுமையான திட்டமிடலை மேற்கொள்வது மிக மிக முக்கியமானது.

- செ. கிரிசாந் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லை ந. அனந்தராஜ்



# இழந்த கல்வியை மீட்டெடுப்பதற்கான பரிகார நடவடிக்கைகள்

இந்த விடயம் தொடர்பாக அதிபர்கள் முன்னெடுக்க வேண்டிய முயற்சிகளைப் விளங்கிக் கொள்வதற்கு பரிகாரக் கல்வி என்றால் என்ன என்பதைப் பற்றித் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்

"எதிர்பார்த்த தேர்ச்சியை மாணவர் அடையாத விடத்து அதற்குத் தடையாக இருக்கும் காரணங்களை அறிந்து மாணவரது இடர்பாட்டை நிவர்த்தி செய்து, குறித்த தேர்ச்சியை அடைந்து கொள்வதற்கு ஆசிரியர் திட்டமிட்டு மேற்கொள்ளும் மாற்றீட்டுக் கற்பித்தல் அணுகுமுறையே பரிகாரக் கல்வியாகும்."

**இன்று வடமாகாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் கல்விப் பெறுபேற்றில் ஒரு தேக்க நிலையைச் சந்தித்து வருகிறார்கள். அதற்கு அவர்கள் பாடரீதியாகச் சில தேர்ச்சிகளில் இடர்பாடுகளை எதிர்கொள்வதே காரணம். இதனை மாணவர்களின் விடைத்தாள்களைப் பகுப்பாய்வு செய்தபொழுது அறியக்கூடியதாக இருந்தது. அவ்வாறான மாணவர்களிடையே இருக்கக் கூடிய இடர்பாடுகளை இனங்கண்டு அவற்றை விரைவாக நீக்குவதற்கான குறுங்காலச் செயல்திட்டம் அதிபர்களிடம் கையளிக்கப் பட்டுள்ளது. இதனூடாக மாணவர்களின் சித்தியின்மை வீதத்தைக் குறைத்து அவர்களில் பெரும்பாலானவர்களின் சித்தி வீதத்தை உயர்த்த முடியும் என எதிர்பார்க்கப்படு கின்றது.**

கடந்த பல வருடங்களாக வட மாகாணம் கல்வி அபிவிருத்தியில் பின்னடைவுகளைச் சந்தித்து வருகிறது. இது தொடர்பாகப் பல்வேறு மட்டங்களிலும் கல்வித்துறை சார்ந்தவர்கள் மற்றும் கல்வி மீது அக்கறை கொண்ட வர்கள் ஒவ்வொருவரும் தமது கவலையைத் தெரிவித்து வருகின்றனர். இது தொடர்பாக வடக்கு மாகாண கல்வி அமைச்சு துரிதமாகச் செயற்படுத்தக்கூடிய வகையில் இலகுவான பரிகார நடவடிக்கைகளை மேற்கொண் டுள்ளது. இவை வலயக் கல்வி அலுவலகங்களினூடாக பாடசாலைகளில் செயற்படுத்தும் வகையில் அமைந் துள்ளன. இதற்கென கடந்த காலப் பரீட்சைப் பெறுபேறு களும் முதல் இரண்டு தவணைகளுக்கான பரீட்சை வினாத்தாள்களும் பகுப்பாய்வு செய்யப்பட்டன. அப்பகுப் பாய்வின் அடிப்படையில் என்னென்ன பரிகார நடவடிக்கை களை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்ற இலக்கை முன்வைத்து திட்டங்கள் வகுக்கப்பட்டன. வடக்கு மாகாணத்தில் உள்ள பன்னிரண்டு வலயங்களிலும் உள்ள அதிபர்களை நேரடியாக அந்தந்த வலயங்களுக்கே சென்று சந்திப்புகள் மேற்கொள்ளப்பட்டன. பரிகார நடவடிக்கைகள் தொடர்பாக அவர்கள் எடுக்க வேண்டிய தொடர் நடவடிக்கைகள் பற்றி பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

தற்போது பாடசாலைகளின் கல்வித்தர மேம் பாட்டை மதிப்பீடு செய்வதற்காக கடந்த இரு தவணைப் பரீட்சைப் பெறுபேறுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இது போன்ற ஒரு களநிலைப் பகுப்பாய்வு வடமாகாணத்தில் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்று அதிபர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆசியா பவுண்டேசன் அமைப் பைச் சேர்ந்த ஆலோசகர் திரு. சுபாஸ்கரன் அவர்களால் க.பொ.த சாதாரணதரப் பெறுபேற்றை உயர்த்துதல் என்ற குறிக்கோளை முன் வைத்து இந்தப்பகுப்பாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதற்கமைய ஒவ்வொரு பாடசாலையிலும் 2017 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள ஒவ்வொரு மாணவரினதும் தற்போதைய நிலை பகுப்பாய்வு செய்யப்பட்டது. இப்பகுப்பாய்வில் இவ் வருடம் சித்தியெய்தத் தவறப் போகும் மாணவர்கள் யார் யார் அவர்கள் எத்தனை புள்ளிகளினால் அந்த வாய்ப்பை இழக்கப் போகின்றனர் என்ற விபரங்கள் திரட்டப் பட்டன. அவ்வாறான மாணவர்களில் ஒவ்வொரு பாட ரீதியாக 14 % ற்கும் 34% வீதத்திற்கும் இடையிலான புள்ளிகளைப் பெறுகின்ற மாணவர்கள் யார் யார் என்ற விபரங்கள் ஒவ்வொரு அதிபர்களுக்கும் வழங்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளன. அவர்களை எவ்வாறு மேலும் ஒரு சில புள்ளிகளை பெறச் செய்து சித்தியடையச் செய்யலாம் என்ற ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டுள்ளன. **இதனை சரியான முறையில் அதிபர்கள் நடைமுறைப்படுத்தினால், சித்தியெய்தத் தவறும் மாணவர்களின் வீதத்தைக் குறைத்து சித்திவீதத்தை அதிகரிக்க முடியும் என்கிற நம்பிக்கை ஒவ்வொரு அதிபரிடமும் தற்போது ஏற்பட்டுள்ளது.**

இவ்வாறு கடந்த இரு தவணைப் பரீட்சைகளினதும் விடைத்தாள்களைப் பகுப்பாய்வு செய்ததில் சித்தியெய்தத் தவறும் சித்திக்கான புள்ளிகளைப் பெறக்கூடிய விளிம்பில் உள்ள மாணவர்கள் அடையாளம் காணப்பட்டனர். அவர்கள் சித்தி எய்துவதில் இடர்பாடு அடையும் விடயங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவை தொடர்பாக பரிகாரக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வழிகாட்டல்கள் அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அறிவுரைப்பு வழிகாட்டல்களில், பாடரீதியாக கூடிய நிறைகளைக் கொண்ட (weightages) தேர்ச்சிகளில் அதிகளவிலான பயிற்சிகளையும் பின்னூட்டல்களையும் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும். இதனால் மாணவர்களின் சித்தி மட்டம் உயரக் கூடிய வாய்ப்புகள் அதிகமாகும். உதாரணமாக விஞ்ஞான பாடத்தில் மாணவர் "அமுக்கம்" என்ற தேர்ச்சியில் குறைவான அடைவைக் கொண்டிருந்தால் அந்தத் தேர்ச்சி தொடர்பாக எளிமையான பயிற்சிகளில் இருந்து கடினமான பயிற்சியை நோக்கிய செயலட்டைகளைத் தயாரிக்க வேண்டும். இவ்வாறான பயிற்சிகளையும் பின்னூட்டல்களையும் மேற்கொள்ளும் பொழுது, மாணவர்கள் விருப்பத்துடன் செயலாற்றுவர். அந்தத் தேர்ச்சியில் உயர்ந்த மட்டத்தை அடைந்து கொள்வர்.

இதே போன்று கடந்த 5 வருட பொதுப் பரீட்சை வினாத்தாள்களில் இடம்பெற்ற வினாக்கள் தொடர்பாக விடயத்திறன் அட்டவணைக்கு (table of specification) அமைய பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் எந்தத் தேர்ச்சியில் அதிகளவிலான வினாக்கள் இடம்பெறுகின்றன என்பதையும், எவ்வாறான வகையில் வினாக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதையும் வினைத்திறன் மிக்க ஓர் ஆசிரியர் அறிந்து கொள்வார். அதற்கமைய இனங்காணப்பட்ட சில தேர்ச்சிகளில் மட்டும் பயிற்சிகளை வழங்கும் பொழுது, மாணவர்களிடையே விரைவான மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்பதை நான் அனுபவபூர்வமாக அறிந்திருக்கின்றேன்.

இதற்கான சில குறுங்காலச் செயல் திட்டங்களைச் செயற்படுத்துவது தொடர்பாகவும் அதிபர்களுக்கு மிகவும் தெளிவான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் தற்போதைய கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் அவர்கள் நேரடியாகவே சம்பந்தப்பட்ட அதிபர்களைச் சந்தித்துள்ளார். நீண்ட நேரம் கலந்துரையாடி அவர்களது பிரச்சினைகளையும் கேட்டறிந்துள்ளார். ஆனால், அவரது பதவிக் காலம் என்பது மிகவும் குறுகியது. அவருக்குப் போதிய கால அவகாசம் இல்லாத போதிலும் இந்த ஆண்டில் ஏதாவது ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை எதிர்பார்க்கலாம் என்ற நம்பிக்கை ஒவ்வொருவரிடமும் தோன்றியுள்ளது. தற்போதைய கல்வி அமைச்சர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக இருந்தவர். அந்த அனுபவத்தைக் கருத்தில் கொண்டு நான்கு வருடங்களுக்கு முன்னரேயே இந்தப் பொறுப்பை அவரிடம் வழங்கியிருந்தால் குறிப்பிடத்தக்க ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம். எல்லா மட்டங்களிலும் அரசியல் தலையீடுகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. கல்வியிலும் கூட அது செல்வாக்கைச் செலுத்துகின்றது. வடமாகாண முதலமைச்சர் அவர்களுக்கும் கடந்த நான்கு வருடங்களாகப் பதவிகளைக் குறிவைத்துப் பாரிய அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் எமது மக்களினதும் பிரதேசத்தினதும் அபிவிருத்திகளும் தடைப்பட்டுக் கொண்டே வருகின்றன.

ஆனால் இந்த விடயத்தில் ஒரு பாடசாலையை உயர்த்தவும், அதனை வீழ்ச்சிப் போக்குக்குக் கொண்டு செல்வதும் அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்களின் கைகளிலேயே நூறுவீதமும் தங்கியிருக்கின்றது. அவர்கள் தாமும் சிறப்பாக இயங்கி தமது ஆசிரியர்குழுவினரையும் வினைத்திறனுடன் இயங்கச் செய்யும் பொழுது அந்தந்தப் பாடசாலைகளின் கல்வி அடைவு மட்டம் உயரும். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஏனெனில் முதலில் கல்வித் தர வீழ்ச்சி தொடர்பான வலிகளை அதிபர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் அதற்கான பரிகார நடவடிக்கைகளையும் அவர்களே முன்வந்து மேற்கொள்வார்கள்.

1990 காலப்பகுதிகளில் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் யுத்தம் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டிருந்த காலத்தில் பல அதிபர்கள் பாடசாலைகளைப் பொறுப்பேற்று நடத்தினார்கள். குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் பொழுது எவ்வித கற்றல் வளங்களோ அல்லது பௌதீக வளங்களோ இருக்கவில்லை. எழுதுகருவிகள், நூல்கள், ஆய்வுகூட உபகரணங்கள் கூட வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. குண்டு வீச்சுக்கள் எறிகணைத் தாக்குதல்களின் மத்தியில் ஆசிரியர்களும், மாணவர்களும் அச்சத்துடன் பாடசாலைக்கு வந்து போனார்கள். ஆனால், க.பொ.த சாதாரணதரம், க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் மிக உயர்ந்த இடத்தில் இருந்தோம். அதிகளவிலான மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்குச் செல்லும் வாய்ப்புக்களும் அதிகரித்திருந்தன. எமது அந்த முயற்சியில் ஒவ்வொரு ஆசிரியரும் யுத்தங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிடையே அச்சத்தின் மத்தியில் பிள்ளைகளின் நலன் கருதி அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். இதனால் கல்வி அடைவில் பாரிய மாற்றத்தைக் கொண்டுவர முடிந்தது. அன்று வடமாகாணம் முதல் ஐந்து இடங்களுக்குள் இருந்தது. அப்பொழுது வகுப்பறையில் 35 மாணவர் களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் ஆசிரியர் களின் பற்றாக்குறையும் காணப்பட்டது. அப்பொழுது எங்களுக்கு வெளியில் இருந்து வந்து எவரும் ஆலோ சனைகள் வழங்கவில்லை. ஆனால் இன்று எல்லா வசதிகளும் உள்ள நிலை காணப்படுகிறது. குறிப்பாக தற்போது 14 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற வகையில் போதிய ஆசிரிய வளம் உள்ளது. கல்வித்தர உள்ளீட்டுக்காக அரசாங்கம் வழங்குகின்ற பெருமளவு பணம், ஆய்வுகூட உபகரணங்கள், கற்றல் – கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் கட்டிட வசதிகள் என்பன தாராளமாக உள்ளன. இந்த நிலையில் எங்களுடைய கல்விப் பணிப்பாளர்களும் அதிபர்களும் இன்னும் சிறப்பாகச் செயலாற்றி இருக்கமுடியும். இந்த விடயத்தில் ஒரு சிறந்த ஆளுமையுள்ள அதிபர் தானே தனது கல்லூரியில் ஆசிரியர்களுக்கு நிபுணத்துவ ஆலோசனை களை வழங்கித் தனது பாடசாலையின் தரத்தை தானே உயர்த்தமுடியும். ஆனால் மிகவும் அர்ப்பணிப்பு மிக்க சேவையும் அதிபர்களின் பங்கேற்பும் குறைவாக இருப்பது தான் கவலையைத் தருகின்றது.

அண்மையில் வடக்கு மாகாணக் கல்வி அமைச் சருடன், வடக்கு மாகாணக் கல்விச் செயலாளர், வட மாகாணக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப் பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் ஒன்று சேர்ந்து அதிபர்களைச் சந்திப்பதற்காகப் பெருமளவு முன்னாயத்தங்களுடன் வலயங்களுக்கே தேடிச் சென்றனர். ஆனால் ஒவ்வொரு வலயத்திலும் ஆகக் குறைந்தது பதினைந்து அதிபர்களாவது அந்தச் செயலமர்வில் கலந்து கொள்ளாது இருந்திருக்கின்றனர். ஏனெனில் அவர்களது பதவிகளை உறுதிப்படுத்துதல் மற்றும் சிங்கள மொழித் தேர்ச்சிகளில் சித்தி அடைதல் போன்றவற்றிற்கான வினைத் திறமைகாண் பரீட்சைக்காக அவர்கள் சென்றிருந்தனர். தொடர்ச்சியாக பதினெட்டு பாடசாலை வேலை நாட்களாக நடைபெற்ற சிங்கள மொழி வகுப்பிற்குச் சென்றமை யால் மேற்படி கல்வி அமைச்சரால் ஒழுங்கு செய்யப்பட்ட அதிபர்களுக்கான செயலமர்வில் பங்கேற்க முடிய வில்லை என்ற காரணம் கூறப்பட்டது. இத்தகைய ஆசிரியர் களுக்கு நன்மை பயக்கும் வகுப்புகளைச் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் பாடசாலை விடுமுறை நாட்களில் நடத்தியிருக்கலாம். இதனால் ஆசிரியர்களும் நன்மை அடைந்திருப்பர், மாணவர்களும் பயனடைந்திருப்பர். இதனைப் பார்க்கும் பொழுது மாணவர்களைப் பணயம் வைக்கும் செயலமர்வுகள் அவசியமா என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வாறான நிலைமையில் நாங்கள் ஏன் கல்வித் தரத்தில் பின்னடைவைக் கண்டு கொண்டிருக்கின்றோம் என்பதற்கு எந்த வகை புறநிலை ஆய்வுகளையும் மேற் கொள்வது அவசியம் என்று நான் கருதவில்லை. அதிபர்கள் தங்களைத் தாங்களே சுய மதிப்பீட்டுக்கு உட்படுத்திப் பார்க்க வேண்டும். அப்பொழுது தான் அவர் களிடம் உள்ள பலம், பலவீனம், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் (SWOT analysis) என்பவற்றை இனங்கண்டு தாங்களே அதற்கான தீர்வுகளையும் கண்டு கொள்ள முடியும்.

ஆசிரியர் வளப்பங்கீடு விடயத்தில் பொதுவாக அதிபர்களினால் ஆசிரியர் வளப்பங்கீடு உரிய முறையில் பங்கிடப்படவில்லை. பாட அடிப்படையில் பொருத்த மானவர்கள் நியமிக்கப்பட வேண்டும். உரிய பாடங் களுக்கு பொருத்தமானவர்கள் நியமிக்கப்படுவதுடன் சமமான ஆசிரியர் வளப் பங்கீடுகளை மேற்கொள்ளப் படவேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது. இது தொடர்பான தகவல்கள் கல்வி அமைச் சினால் திரட்டப்பட்டுள்ளன. எதிர்வரும் மார்கழி மாதத்திற் குள் இத்தகைய குறைபாடுகள் நீக்கப்பட்டு ஆசிரியர் பரம்பலைச் சீராக்க செயலாளரும் மாகாணக் கல்விப் பணிப்பாளரும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்த விடயத்தில் அதிபர்களும் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதும் அவசியமாகும். பல பாட சாலைகளில் ஆசிரியர்கள் தேவைக்கதிகமாக ஒழிந் திருக்கின்ற நிலையை மாற்றி அவர்களது விபரங்கள் உடனடியாகக் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அவ்வாறு ஒவ்வொருவரும் வெளிப்படைத் தன்மையுடன் இயங்கினால் பாடசாலைகளில் நிலவுகின்ற பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விடும்.

**தற்போது மாணவர்களுக்குக் கட்டுப்பாடற்ற சுதந்திரம் இருக்கின்றது. தாராளமாக 3T என்று மாண வர்களைத் திசை திருப்பும் இலத்திரனியல் சாதனங் களான Tab, Television, Telephone என்பனவற்றின் பாவனைகள் அதிகரித்துள்ளன. இந்த நிலையில் பாட சாலைக் கல்வியின் மீதான மாணவர்களின் அக்கறையும் குறைந்து கொண்டு வருவதையும் கவனத்தில் எடுக்க வேண்டும். இவற்றின் பாவனையைப் பாடசாலை நேரங் களில் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் தற் போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேவேளை புலம்பெயர்ந்த உறவுகளும் இங்கே தாயகத்தில் உள்ள தமது உறவுகளுக்குப் பணத்தை அனுப்பும் பொழுது தேவையும் அவசியமும் உணர்ந்து அனுப்பினால், இவற்றின் பாவனைகளைப் பெருமளவில் கட்டுப் படுத்தலாம். அப்பொழுது மாணவர்களுக்குப் பாடசாலைக் கல்வியின் மீதான அக்கறையும், ஈடுபாடும் அதிகரிக்கும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 இற்கு வயது 30



ஐங்கரன்

சரியாக 30 வருடங்கள் கடந்துவிட்டன. 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்து. 1987 நவம்பர் 14 இல் நிறைவேறிய இந்தச் சட்டம்தான் தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுக்கு – தமிழ் மக்களுக்கு அரசாங்கம் தந்த ஒரேயொரு அதிகாரப் பகிர்வு. ஆனால் இது விரும்பாச் சட்டம். இந்தச் சட்டத்தை வழங்க அரசாங்கமும் அதனை உருவாக்கிய சிங்கள மக்களும் விரும்ப வில்லை. சொற்ப அதிகாரங்களை ஏற்பதற்கு தமிழர்களும் விரும்பவில்லை. ஆனால் பெரும்பான்மை இனமோ, தமிழர்களுக்கு இவ்வளவு அதிகாரங்களா...? என்று ஆத்திரப்பட்டனர். தமிழர்களோ இவ்வளவுதானா அதிகாரங்கள்...? என்று தொய்ந்து போயினர். உண்மையில் 13 இன் மூலம் அரசு மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை பகிரவில்லை மாறாக பரவலாக்கமே செய்தது. அதுவும் தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுமல்ல நாட்டின் முழு மாகாணங்களுக்குமே.

தங்களின் உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்திய தமிழர்களோ தனிநாடே தீர்வு என்றார்கள். நாட்டில் அமைதியையும் – சமாதானத்தையும் நிலைநிறுத்த வேண்டிய அரசோ கடமையை மறந்து, இனவாதம் பிடித்து – தமிழர் இரத்தம் கேட்டு நின்றது. உரிமைகளுக்காக ஆயுத வழியை நாடியவர்களையும் – இனவாதம் பிடித்து இரத்தவெறி கொண்டு நின்ற அரசாங்கத்தையும் விலக்குப் பிடிக்க வந்தது இந்தியா. இரு தரப்பாரையும் பேச வைப்பதில் தோற்றுப் போனது. தன்னைப் "பெரிய அண்ணன்" என்றெண்ணி அதே பாணியில் நடக்க முற்பட்டு, எதைப் பற்றியும் கவலையின்றி தான்தோன்றித் தனமாக தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரித்தது. குறைந்த பட்சம் சுயாட்சி – சமஷ்டியைக்கூட அது பெற்றுக் கொடுக்க முயலவில்லை. மாறாக தான் பெற்றுத் தருவதை தமிழர்கள் மறுப்பின்றி ஏற்க வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றது.

இலங்கையின் ஆட்சியாளர் போக்கையோ, கடந்த கால இனவெறிச் செயல்களையோ, அரசமைப்பு சாசனத்தையோ அது ஆராய முற்படவில்லை – குறைந்தபட்சம் பார்க்கத்தானேனும் விரும்பவில்லை. இதேபோன்று போராட்ட அமைப்புகளின் விருப்பத்தையோ அன்றி தமிழ் மக்களின் விருப்பையோ, கருத்தையோ அறிய விரும்பவில்லை. "நான் சொல்வதைக் கேட்டால் போதும்" என்று பெரிய அண்ணனாகவே நடந்தது. விளைவு இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் எவருக்கும் பிடிக்காத – எவருமே விரும்பாத 13 இன் மூலம் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டன. பல விருப்பமின்மைகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் மத்தியிலும் தமிழர் விரும்பிய ஒரு விடயம் நடந்தேறியது. அது வடக்கு – கிழக்கு மாகாணங்களின் இணைப்பு.

**வடக்கு – கிழக்கு இணைப்புக் குறித்து நாம் என்னதான் மகிழ்ச்சியடைந்தாலும் தமிழர் தாயகத்தின் ஒரு பகுதி நிலப்பரப்பு புத்தளம் மாவட்டம் தனித்துப் போய் – எமது கையை விட்டுப் போனது. காலாதி காலம் நடத்தப்பட்ட – திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழர் தாயகத்தை கூறுபோட்ட பேரினவாதிகளுக்கு இது வாய்ப்பாக அமைந்தது. அவர்களுடன் நம் சகோதர இனத்தவர்களான முஸ்லிம்களும் இணைந்து புத்தளத்தை கூறுபோட்டனர். தமிழர் தாயகத்தின் பெரும் தேசம் ஒன்றை நாம் மறக்கவும் – இழக்கவும் காரணமாக அமைந்ததும் இந்த 13 ஆம் திருத்தச் சட்டம்தான்.**

"13 ஐ ஏற்று ஆயுதங்களை கீழே வையுங்கள்" என்ற தருணத்தில்தான், தமிழ் மக்களின் விடியலுக்காகப் போராடிய விடுதலைப் புலிகள் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தையும் – அதன் விளைவான 13 ஆம் திருத்தச் சட்டத்தையும் ஏற்க மறுத்தனர். இதையடுத்து தலைவர் பிரபாகரன் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டதும் – மிரட்டப்பட்டதும் – அவர் இலங்கை மீண்டு, சுதுமலைப் பிரகடனத்தை வெளியிட்டதும், அமைதிப் படை ஆக்கிரமிப்பு படையாக மாறி புலிகளை அழிக்கிறோம் என்று மக்களை கொன்று குவித்ததும், பின்னர் புலிகளிடம் அடிவாங்கி இழப்புகளை சந்தித்து தோல்வியுடன் இந்தியா திரும்பியதும் வரலாறாகின.

எமது இந்த வீரவரலாறின் ஊடேதான் இன்னொரு கறைபடிந்த வரலாறும் எழுதப்பட்டது. அன்று இந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோவின் செல்லப்பிள்ளைகளான ஈ.பி.ஆர்.எல். எவ், ரெலோ போன்ற கட்சிகள் 13 ஐ ஏற்றன. அவை ஈ.என்.டி.எல்.எவ் கட்சியாக மாறி தேர்தலில் போட்டியிட்டு – சொற்ப வாக்குகளுடன் வடக்கு – கிழக்கு மாகாண சபையின் ஆட்சியைக் கைப்பற்றின. புலிகளின் அழைப்பை ஏற்று பெருவாரியான மக்கள் வாக்களித் திருக்கவில்லை. இணைந்த வடக்கு – கிழக்கு மாகாணத் தின் முதலமைச்சராக அப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் வரதராஜப்பெருமாள் பொறுப்பேற்றார். 13 மாத ஆட்சியில் அவர்களால் எதையும் செய்ய முடிய வில்லை – சுருங்கக்கூறின் மத்திய அரசை மீறி துரும்பைக்கூட அசைக்க இயலவில்லை. இறுதியாக எதுவும் இல்லாமலே அவர்களின் ஆட்சி கலைக்கப்பட்டது. விடுதலைப் புலிகளிடம் போரில் தோற்று, நாட்டை விட்டு வெளியேறிய இந்திய இராணுவத்துடன், ஈ.என்.டி.எல். எவ்வினரும் வெளியேற்றப்பட்டார்கள். பின்னாளில் – போர் முடிவுக்கு வந்த சமயத்தில் நாடு திரும்பிய வரதராஜப்பெருமாள் “வடக்கு – கிழக்கு மாகாண சபைக்கு கால்துடைப்பத்தைக் கூட வாங்க முடியாத நிலையே இருந்தது” என்றார்.

உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்திய தமிழ் மக்களுக்கு 2002 நம்பிக்கை அளிக்கும் ஆண்டாக இருந்தது. புலிகள் – அரசாங்கம் சமாதானப் பேச்சு ஆரம்பமானது. மீண்டும் 13 ஐ நடைமுறைப்படுத் துவது குறித்து யோசித்தது அரசு. புலிகள் அதைத் தொடவேயில்லை. புலிகள் சுயாட்சி குறித்து மட்டுமே சிந்தித்தனர் – பேசினர். அதிகாரம் எதுவுமே இல்லாத வெற்றுக்கோதான 13 ஐ பெற புலிகள் தயாரில்லை. 2005 இல் தீவிர பேரினவாதியான மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி யைக் கைப்பற்றினார். 2006 நடுப்பகுதியுடன் சமாதானப் பேச்சு முடிவு கட்டப்பட்டது. இதேகாலப் பகுதியில் பேரினவாதக் கட்சிகளில் ஒன்றான ஜே.வி.பி. வடக்கு, கிழக்கு இணைப்பு சட்டவிரோதமானது மட்டுமல்ல மக்களுக்கும் விரோதமானது என்று கூறி அடிப்படை உரிமைகள் மீறலின் கீழ் உயர்நீதிமன்றில் வழக்குத் தொடுத்தது.

பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள் என்பார்களே, அதுபோல்தான் இங்கும் நடந்தது. “மக்களின் விருப்பை – ஆதரவைப் பெறாத வடக்கு – கிழக்கு மாகாணங்களின் இணைப்பு தவறானது” இப்படி இனவாதத் தீ கனன்று கொண்டிருந்த வேளையில் – இனவாத ஆட்சியாளர்களின் உயர்நீதிமன்றும் தனது தீர்ப்பை வழங்கியது. சமாதானத்தின் மீது இருந்த துளியளவு நம்பிக்கையும் தமிழருக்கு இல்லாமல் போனது – போகச் செய்யப்பட்டது. இத்தனைக்கும் இந்திய அரசோ, சர்வதேசமோ கிஞ்சித்தும் அக்கறை கொள்ள வில்லை. மாறாகப் பேரினவாத அரசாங்கத்தைப் பலப் படுத்தின. மீண்டும் மேகங்கள் கருக்கொண்டன. தொடர்ந்தது போர். 2009 மே 19 ஆம் நாளுடன் எமது ஆயுத பலம் மௌனிக்கப்பட்டது. எமது பேரம் பேசும் பலமும் அன்றுடன் இல்லாது போனது. இதனிடையே 13 பிளஸ் என்று அதிகாரங்களைக் கேட்டோம். தோற்றவர் களின் குரல் வென்றவர்களுக்குக் கேட்குமா? ஒருபோதும் கேட்பதில்லையே. 13 ஐயே மறுப்பவர்கள், 13 பிளசுக்கு சம்மதிப்பார்களா என்ன?

**“குறைந்த பட்சம் சுயாட்சி – சமஷ்டியைக்கூட அது பெற்றுக் கொடுக்க முயலவில்லை. மாறாக தான் பெற்றுத் தருவதை தமிழர்கள் மறுப்பின்றி ஏற்க வேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்றது இந்தியா”**

போர் முடிந்த கையோடு கிழக்கில் தேர்தலை நடத்தியது. தமிழரின் துரோகப் பட்டியலில் இடம் பிடித்த பிள்ளையான் என அறியப்பட்ட சிவநேசதுரை சந்திர காந்தன் என்ற தனது செல்லப்பிள்ளையை ஆட்சிக் கட்டிலில் உட்கார வைத்து அழகு பார்த்தது. ஆனால் அவர்களுக்கும் சில சலுகைகளை வழங்கியதே தவிர அதிகாரங்களை வழங்கவில்லை. 13 இல் கூறப்பட்ட காணி, பொலிஸ் அதிகாரங்களையும் மறுத்தது.

நிறைவேற்று அதிகாரம் – சர்வதிகார பாணி அதி காரத்தில் இருந்து மஹிந்த ராஜபக்ஷவோ அல்லது நல்லாட்சி நாயகனாகக் காட்டிக் கொள்ளும் மைத்திரிபால சிறிசேனவோ இறங்கி வரவில்லை. கிழக்கு மாகாண சபையில் வெறுமனே பதவிக் கதிரைகளில் அமர்ந்தே காலத்தை தள்ளினர். உருப்படியாக எதையும் சாதிக்க வில்லை – சாதிக்க விடவும் இல்லை.

கிழக்கில் இருந்த சார்புநிலை வடக்கில் தமக்கு இல்லை என்பதால் தேர்தலை இழுத்தடித்தது மகிந்த அரசாங்கம். இந்திய – சர்வதேச அழுத்தங்களால் 2013 இல் வடக்கு மாகாண சபை தேர்தலை நடத்தியது. அதற்கு முன்னதாக தமிழரை மிரட்டவும் – அவர்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாத இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் சந்திரசிறியை ஆளு நராக்கியது. எதிர்பார்த்ததுபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வென்றது. சி.வி.விக்னேஸ்வரன் முதலமைச் சரானார். முன்னாள் நீதியரசரான அவருக்கே தண்ணி காட்டியது அரசாங்கம். 13 இன் அரசியல் – சட்ட சூட்சுமங் கள் நீதியரசராக இருந்தவருக்கே புரியாத புதிரானது.

(14 ஆம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தலைமைகளின் தந்திரோபாயங்கள் தான் என்ன?



தொகுப்பு – விக்னேஸ்வரி

**'ஓர் அரசியல்தீர்வை எதிர்கொள்ளல்' எனும் தலைப்பில் புதிய அரசியல் அமைப்பு தொடர்பான தெளிவு படுத்தல் கூட்டம் தமிழ்மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த 05.09.2017 அன்று வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் "புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் அமெரிக்க இந்திய சீன நலன்களை விளங்கிக் கொள்ளல்" எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அரசறிவியல் துறைத்தலைவரும், சிரேஷ்ட அரசியல் ஆய்வாளருமான கலாநிதி கே.ரி. கணேசலிங்கம் ஆற்றிய உரை வருமாறு:**

அரசியல் களம் என்பது ஒரு வகையில் தந்திரமானது. வடக்கு–கிழக்கில் பூர்வீகமாக வாழுகின்ற தமிழ், முஸ்லிம் மக்களுடைய தந்திரம் பற்றித் தான் நாங்கள் இன்று உரையாட வேண்டும். சர்வதேச மட்டத்தில் இயங்குகின்ற ஒவ்வொரு அரசுகளுக்குப் பின்னால் அந்தந்த அரசுகளினுடைய நலன்கள் முதன்மையானது. அதை யாரும் மறுத்துவிட முடியாது. இதில் இந்தியர்கள் ஒரு வடிவம், சீனர்கள் ஒரு வடிவம், அமெரிக்கர்கள் ஒரு வடிவம் என்று எதுவுமே கிடையாது. எல்லோருமே ஒரே தளத்தில் இருந்து இயங்குபவர்கள்.

தமிழ் மக்கள் மத்தியில் புதிய அரசியல் யாப்பு வாக்கெடுப்பிற்கு விடப்படுமாக இருந்தால் எவ்வகையான உணர்வுகளோடு தமிழ் மக்கள் அந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக ஒரு விழிப்புணர்வு அறிவூட்டல் செய்யப்பட வேண்டும். அதற்கான உரையாடலுக்காகவே தமிழ் மக்கள் பேரவை இந்த அரங்கை தயார் செய்திருந்தது. அந்தவகையில் சர்வதேசம் இந்த யாப்பு உருவாக்கத்தில் செலுத்தும் செல்வாக்கை ஆராய்வோம்.

பல ஆண்டுகளாக நீடிக்கும் இந்த அரசியல் யாப்புகளுடைய உருவாக்கத்தின் பின்னால் நிறைய அரசியல் நகர்வுகள், நிறைய தந்திரங்கள் கையாளப்படுகின்றன. அமெரிக்க இந்தியக் கூட்டும் சீனாவும் ஒரே மூலோபாயத்தோடு இயங்குகின்றன. இலங்கை ஒரு மூலோபாய நிலையத்தில் இருக்கின்றது என்பது தான் அதற்கான உண்மைக் காரணமாகும். இந்த மூன்று சக்திகளின் மூலோபாயங்களுக்கும் பின்னால் இருக்கின்ற ஒரு முக்கிய அம்சம் இந்து சமுத்திரத்தின் மையத்தில் இலங்கை அமைந்திருப்பது தான். இந்த சக்திகள் இனப்பிரச்சனையையும் அரசியல் யாப்பையும் ஒன்றாக முடிச்சுப் போட்டு வைத்திருப்பதற்குப் பின்னால் உள்ள காரணம் தங்களுடைய போக்குவரத்தையும், பாதுகாப்பையும் சார்ந்திருக்கக் கூடிய அம்சங்களையும் பொருளாதார நலன்களையும் நிறைவேற்ற இலங்கையை ஒரு மையமாக வைத்து கையாளுதல் தான்.

இலங்கையின் இப்போதைய ஆட்சியாளர்கள் மிகச் சிறந்த தந்திரோபாயத்தில் வல்லமை உடையவர்களாக இருக்கின்றார்கள். அவர்களை குற்றம் சாட்டுவதற்காகவோ அல்லது இந்த பிராந்திய சர்வதேச சக்திகளை குற்றம்சாட்டுவதற்காகவோ நான் இங்கே இந்த உரையைத் தரவில்லை. சர்வதேசம் எந்த மூலோபாயங்களின் கீழ் இயங்குகிறது அவற்றைக் கையாளக் கூடிய வகையில் என்ன தந்திரோபாயங்களை தமிழ்த் தலைமைகள் கொண்டிருக்கின்றன என்பதைக் கேள்விக் குட்படுத்தவே நான் இந்த உரையைத் தருகின்றேன்.

**இந்தியர்களாக இருக்கலாம், அமெரிக்கராக இருக்கலாம், ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். உலகத்திலுள்ள எல்லோருக்கும் தங்களுடைய தேசம், தங்களுடைய தேசியம், தங்களுடைய நலன்களே மிக முக்கியமானதாகும். பிரித்தானியப் பிரதமர் இங்கு வந்த போது எங்களுடைய மக்களின் குடில்களில் இருக்கின்ற சோற்றுப்பானைகளை திறந்து பார்த்தமை என்பது அவர்களுடைய நலன்பாற்பட்ட அரசியலே ஆகும். எங்கள்மீதான பற்றுதலோ அல்லது எங்கள் மீதான அனுதாப அரசியல் அல்ல என்பது என்னுடைய வாதம்.**

இலங்கையின் இனப்பிரச்சனையில் சர்வதேச நாடுகள் ஒரு தொடுகையியல் கொள்கையை (Touching Policy) வைத்துக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு வைத்தால் தான் அவர்கள் கூறுகின்றபோது நீங்கள் வாக்களிப்பீர்கள். ஏனென்றால் அமெரிக்கா, இந்தியா பின்னால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றது. ஆகவே நிச்சயம் இதில் ஒரு மாறுதல் வரும் என்ற எண்ணம் உங்களிடம் எழும். அதுக்காகவே இனப்பிரச்சனையை ஒரு கருவியாக பயன்படுத்திக் கொள்ளலே சர்வதேச நாடுகள் எல்லாவற்றினுடைய தந்திரமாகும்.

இதில் சீனர்கள் கொஞ்சம் குறைந்த தளத்திலே இயங்குகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் இலங்கையினுடைய நிலங்கள் வர்த்தக நோக்கில் குத்த கைக்கு கிடைக்குமானால் போதுமானது. அதனால் அவர் கள் உள்நாட்டு அரசியலில் அதீத கரிசனை கொள்வ தில்லை. அமெரிக்கர்கள் 1970களில் 1980களில் என்ன கொள்கையை கொண்டிருந்தார்களோ அதே கொள்கை யையே சீனர்கள் இப்பொழுது பின்பற்றுகின்றார்கள். அவர்களும் 2050 ஆம் ஆண்டிற்கு பின் வேறு கொள் கைக்கு வருவார்கள். இது தொடர்பில் இலங்கையில் இருக்கின்ற சீனத் தூதுவருடைய கருத்துக்கள் உங்களுக்கு ஒரு பதிவாக இருக்குமெனக் கருதுகிறேன்.

இன்றைய இலங்கைச் சூழலில் நேரடியான தலையீட்டையோ, அல்லது பகுதியளவான செல்வாக் கையோ அல்லது எங்கள் மீதான ஒரு தொடுகையையோ இந்தியர்கள், அமெரிக்கர்கள் கொண்டிருப்பது என்பது அவர்கள் கடந்த காலத்தில் ஏற்படுத்திக்கொண்ட அரசி யலின் அறுவடைகள் தான். இந்து சமுத்திரத்தினுடைய மையம் என்பதும் இந்து சமுத்திரத்தினூடாக தங்களுக்கு ஏற்படக்கூடிய பாதுகாப்பிற்கான போட்டிதான் இங்கே இருக்கின்ற சர்வதேச அரசியல் களம் என்று நினைக்கி றேன்.

இலங்கையின் இனப்பிரச்சினையினுடைய தீர்வாக அரசியல் யாப்பை அவர்கள் ஒரு காலத்திலும் கருத வில்லை. இலங்கையினுடைய ஆட்சிமாற்றத்தை வலிந்து முதன்மைப்படுத்துகின்ற போது அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட மாறுதல் என்பது நிலையானதாக இருக்க வேண்டும். இந்த இடத்தில் ஒரு நெருடல் வருகின்றது. சீனர்களை தென்னிலங்கை சக்திகள் கைவிடுவதற்கு தயாராக இல்லை. சீனர்கள் இந்த உலகப் பொருளாதாரத் தில் முதன்மையான இடத்தை பெற்றிருக்கிறார்கள். சீனர்களைக் கையாள்வதில் ராஜபக்ஸ அரசாங்கத்திற் கும், மைத்திரிபால அரசாங்கத்திற்கும் இடையில் எந்த வேறுபாடுமில்லை. இருவருக்குமே சீனர்கள் அவசிய மானவர்கள். சீனர்களுடைய பொருளாதார உத்திகள், பொருளாதார உதவிகள் அவசியமானவை. ஆகவே இந்த அடிப்படையில் பார்த்தால் இப்பொழுது இந்தியர் கள், அமெரிக்கர்கள் ஒரு முடிவெடுத்துவிட்டார்கள். அண்மையில் அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலாளர் அலிஸ் வெல்ஸினுடைய பயணம், இந்திய வெளிவிவகார அமைச்சருடைய பயணம், இந்துசமுத்திர மாநாடு தொடர்பாக அலிஸ் வெல்ஸ் ஆற்றிய உரை ஆகியவற்றை அவதானிப்போம். 2015 ஆம் ஆண்டுகளில் அப்போதைய வெளிவிவகார இராஜாங்க செயலாளராக செயலாற்றிய ஜோன் கெரி குறிப்பிட்ட அதே வார்த்தைகளை மீளவும் அலிஸ்வெல்ஸ் இப்போதும் குறிப்பிட்டுவிட்டுச் செல்கின்றார்.

**ஆகவே 2015 ஆம் ஆண்டுகளிலிருந்து 2017 ஆம் ஆண்டுகளுக்கிடையில் ஒரே ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. சீனர்களை வைத்துக் கொண்டு ஒரு கையாளுகை அரசியலை இங்கே நடத்துவோம் என்று அமெரிக்கர்களும் இந்தியர்களும் முடிவெடுத்து விட்டார்கள் என்பதுதான் அது. தென்னிலங்கை அரசியலின் பயணம் ஏறக்குறைய இந்த நோக்கத்திற்கு இசைவு பெறக்கூடிய விதத்தில் அமைந் துள்ளது. ஒரே உறையில் இரண்டு வாள்கள் உறங்காது என்றார் கருணாநிதி. இலங்கையைப் பொறுத்தவரையில் மூன்று வாள்கள் ஒரே உறையில் உறங்கி தூங்கி உறவாடி தங்களுடைய அரசியல் நலன்களைச் சாத்தியப்படுத்து கின்றன. ஒன்று அமெரிக்கர்கள், இந்தியர்கள் அடுத்தது சீனர்கள். இவர்களுக்கிடையில் மோதல் இருக்கின்றது என்பது உண்மை. இன்று இருக்கின்ற இந்த அரசியல் களம் என்பது ஒரு மென்அதிகாரத்தளத்தில் இருந்து பிரயோ கப்படுத்தப்படுகின்றது. ஆகவே அவர்கள் மோதுவதைவிட மூவரும் தங்களுக்குள்ளே அரசியலை கையாளுகின்ற ஒரு உத்தியை இலங்கையில் ஆரம்பித்திருக்கின்றார்கள். அதன் ஒரு அறுவடை அல்லது ஒரு அம்சம்தான் இந்த புதிய அரசியல் யாப்பினுடைய உருவாக்கம்.**

ஆகவே நிச்சயம் இந்தியர்கள் 13 ஆவது திருத்தத்திற்கு மேல் செல்லத் தயாராகவில்லை. சீனர்கள் இலங்கையில் இருக்கின்ற எல்லாக் களங்களையும் சரியான வடிவத் திற்குள் கையாள்வது என்பதை விடுத்து தங்களுடைய அரசியல் இலாபம் மட்டும் போதுமானதாக இருந்தால் சரி என்று இருக்கிறார்கள். அது ராஜபக்ஸவாக இருக்கலாம், மைத்திரிபாலவாக இருக்கலாம் ரணில் விக்ரமசிங்கவாக இருக்கலாம் என்பது சீனர்களுடைய எண்ணம். இந்தியர் களைப் பொறுத்தவரையில் 2017 ஆம் ஆண்டிற்கு பிந்திய காலப்பகுதியில் சீனாவோடு 99 வருட ஒப்பந்தம் செய்த பிற்பாடு அவர்களுடைய புலமையாளர்களும் அவர் களுடைய புலனாய்வுப்பிரிவினரும் பெருமளவிற்கு அதிருப்தியடைந்துள்ளார்கள். இலங்கை அரசுமீது சில நெருக்கடிகளை கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே இந்த அடிப்படையில்தான் 13 ஆவது திருத்தக் கோட்டைக் கடப்பதா இல்லையா என்பதை அவர்கள் பார்க்கிறார்கள். எது எவ்வாறெனினும் இன்றைய இந்திய ஆட்சியாளர்களும் அமெரிக்காவின் பின்புலத்தில் அல்லது அமெரிக்காவினுடைய உறவாடலினூடாகவே இலங்கையினுடைய அரசியலை கையாள விரும்புகிறார்கள் என்பதே நிதர்சனமாகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க இந்திய சீன நலன்களில் எமது நலனை முன்னிறுத்தல்



தொகுப்பு – தேனுகா

ஓர் அரசியல் தீர்வை எதிர்கொள்ளல் எனும் தலைப்பில் புதிய அரசியல் அமைப்பு தொடர்பான தெளிவு படுத்தல் கூட்டம் தமிழ்மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த 05.09.2017 அன்று வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் "புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் அமெரிக்க இந்திய சீன நலன்களை விளங்கிக் கொள்ளல்" எனும் தலைப்பில் பேராசிரியர் சிற்றம்பலம் ஆற்றிய உரை வருமாறு,

இலங்கையிலே காணப்படும் இனப்பிரச்சனையும், அதனை தீர்ப்பதில் தமிழ் மக்களுடைய பங்களிப்பும் தான் முக்கியமானவை. இதில் எமது பங்கு என்ன? நாம் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றி ஆராய வேண்டியது தான் இன்றைய கருத்தரங்கிலே பார்க்க வேண்டியவையாகும். எமது பிரச்சனை இன்று உள்நாட்டுப் பிரச்சனை அல்ல. இது ஒரு சர்வதேசப் பிரச்சனையாக இருப்பது மட்டுமல்ல, ஐக்கிய நாடுகள் சபையிலும் அரங்கேறியிருக்கிறது.

1961 ஆம் ஆண்டு வடகிழக்கு நிர்வாகத்தை மூன்று மாதம் ஸ்தம்பிதம் செய்த சத்தியாக்கிரகம் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். தந்தை செல்வா அவர்களுடைய பாசறையில் வளர்ந்த மாணவர்கள், இளைஞர்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் அதிலே பங்கு பற்றியிருந்தார்கள். இளைஞர்களாக இருந்த நானும், கௌரவ சித்தார்த்தனும் அந்த சத்தியாக்கிரகத்தில் பங்குபற்றுவதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி நடுநிசியிலே இராணுவம் பலவந்தமாக நுழைந்து சத்தியாக்கிரகிகளை நையப்புடைத்து எல்லோரையும் தூக்கிச் சென்றது. சாத்வீகப் போராட்டம் ஆயுதப் போராட்டத்தால் அடக்கப்பட்டது. ஆனால் அன்று சர்வதேசம் மௌனமாகத்தான் இருந்தது. அதுவும் தமிழ்நாட்டிலே இருந்த அறிஞர் அண்ணா, ராஜாஜீ போன்றோர் கவலை தெரிவித்தனரேயொழிய இந்திய அரசோ அமெரிக்க மேற்குலக நாடுகளோ இந்தப் பிரச்சனையிலே அக்கறையும் கரிசனையும் கொள்ளவில்லை. அது அன்றைய நிலை.

இன்று எங்களுடைய பிரச்சனையில் சாத்வீக ரீதியான போராட்டமும் பின் ஆயுதப் போராட்டமும் சர்வதேசத்தின் கண்களை திறந்தது மட்டுமல்ல அவர்கள் பங்காளிகளாக இந்த நாட்டினுடைய பிரச்சனையிலேயே தலையிடுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை கொடுத்துள்ளது. தந்தை செல்வா ஒன்றையும் சாதிக்காவிட்டாலும் ஒன்றை மட்டும் சாதித்திருக்கிறார். தமிழர் பிரச்சனையை பிரச்சனையாகவே விட்டுச் சென்றிருக்கிறார். அந்தப் பிரச்சனை அவரோடும் மறையவில்லை. அடுத்த சந்ததியிடமும் கையளிக்கப்பட்டு இன்று சர்வதேச அரங்கிலே நீதி கேட்டு நிற்கின்றது. இதிலே வருகின்ற வல்லரசுகள் தங்களுடைய தேவைகளுக்காக வந்தாலும் கூட அவற்றை எமது தேவைக்கேற்ப பயன்படுத்துகின்ற கடப்பாடும் தகுதியும் எமக்கு இருக்கின்றது.

**உதாரணமாக 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதுவும் எங்களுடைய பங்களிப்புடன் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. நாங்கள் நல்ல ஒரு சந்தர்ப்பத்தை தவறவிட்டோம் என்பது தான் எனக்கு மிக கவலை. ஏனென்றால் ஆட்சி மாற்றம் ஏற்படுகின்ற பொழுது ஒரு நடுவர் மூலம் எங்களுடைய தேவை என்ன, எங்களுடைய தீர்வு என்ன என்பது உள்ளிட்ட ஒரு தெளிவான உடன்படிக்கையிலே கைச்சாத்திட நாங்கள் தவறி விட்டோம். 2015 ஆம் ஆண்டிலே அமெரிக்காவை நாம் நடுவராக வைத்திருந்திருக்கலாம் அயல்நாடான இந்தியாவை நடுவராக வைத்திருந்திருக்கலாம் காரணம் இந்திய அரசினருடன் மேற்கொள்ளப்பட்ட 13 ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்ட அதிகாரங்கள் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்ற அங்கலாய்ப்பு எங்களுக்கு இருக்கின்றது. அதை முழுமையாக கவனித்து நடத்தவில்லை என்ற குறைபாடு இந்தியாவிற்கும் இருக்கின்றது. அந்த நிலையிலே ஆட்சிமாற்றத்திற்கு கை கொடுத்து எங்களையும் பயன்படுத்திய அவர்களிடம் இந்த ஆட்சி மாற்றத்திலே எங்களுடைய நிச்சயமான தீர்வு இதுதான் என்பதை தமிழர் தரப்பு பகிரங்கமாக மனம் திறந்து வெளிப்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பம் அது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது எப்படியான தீர்வு என்றால் வடக்கு-கிழக்கிலே எங்களுடைய தாயகத்திலே சுயாட்சி. எங்களுடைய அதிகாரம் வடக்கு-கிழக்கிலே ஏற்கனவே இருக்கின்றது. மத்தியிலும் எமக்கு கணிசமான பங்காளிகள் இருக்கின்றார்கள். இதுவரையில் நாங்கள் மத்தியில் பங்காளிகளாக இருக்கவில்லை. இந்த சந்தர்ப்பத்தை நாங்கள் தவற விட்டோம். "உடன்படிக்கைகள் எழுதலாம் ஆனால் அவர்கள் அவற்றைக் கிழித்துப் போடுவார்கள்" என்று சிலர் சொல்லலாம். கடந்த காலத்திலும் உடன்படிக்கைகள் கிழிக்கப்பட்டதுதான். தந்தை செல்வா டட்லி ஒப்பந்தம், ஏன் இலங்கை இந்திய ஒப்பந்தமும் கூட கிழிக்கப்பட்டது. இவற்றிலிருந்து நாங்கள் பாடம் கற்றுக் கொள்ளவேண்டும். நாம் ஒரு நடுவர் மூலம் எங்களுடைய பிரச்சனைகளைக் கதைப்பதற்கான சந்தர்ப்பம் இந்த சர்வதேச அரங்கில் கிடைத்தது என்பது மறுக்க முடியாதது.

நீண்ட காலமாக நாங்கள் கோரி வந்த 1949 ஆம் ஆண்டு தொடக்கம் மாறி மாறி வந்த தேர்தல்கள் எல்லாவற்றிலும் மக்களுடைய அங்கீகாரங்களுக்கு விடப்பட்ட எங்களுடைய அரசியல் தீர்வு இதுதான். மாநிலத்தில் சுயாட்சியும் மத்தியில் கூட்டாட்சியும் என்ற சமஷ்டி அமைப்பை நாங்கள் வலியுறுத்தும் நிலைக்கு வந்து விட்டோம். "இந்த இரண்டு கட்சி அரசாங்கமும் அவர்களுக்குள் அடிபட்டவர்கள். இப்பொழுது ஒன்றாக இருக்கிறார்கள். அதனால் அவர்கள் எங்களுக்கும் தீர்வைத் தருவார்கள்" என்று நம்புவது மடமைத்தனம். காரணம் இந்த இரண்டு கட்சிகளும் மாறிமாறி என்னென்ன செயற்பாடுகளை முன்னெடுத்தன என்பதைப் பார்க்க வேண்டும். தமிழர் பிரச்சனையிலே தங்களுடைய கட்சி நலன்களுக்காக உடன்படிக்கைகளைக் கிழித்தெறிவதற்கு மட்டுமன்றி இந்த பிரச்சனையை நீடிப்பதற்கும் முக்கிய் காரணமாக இவை இருந்துள்ளன.

எனவே நல்லாட்சியிலே இவைகளை நிவர்த்தி செய்யக் கூடிய மாற்று நடவடிக்கை பற்றி நாம் சிந்தித்திருக்க வேண்டும். இன்றும் அவர்கள் சொல்கிறார்கள் ஒற்றையாட்சிதான் தீர்வு. அதிகாரப்பகிர்வு கிடையாது. பௌத்தத்துக்கு முக்கிய இடம். இந்த நாடு பல்தேசிய நாடு என்ற வார்த்தையையே அவர்கள் உச்சரிப்பதில்லை. ஆகவே இந்தச் சந்தர்ப்பத்திலே சர்வதேசத்தில் எங்களுடைய பலத்தை இரண்டுவிதமாக பயன்படுத்த வேண்டும். இங்கு வரும் இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் போன்ற நாடுகள் உள்ளிட்ட சர்வதேசத்தை பிரச்சனைக்கு உதவுபவர்களாக அவர்களை ஆக்கிக்கொள்ள வேண்டும். அதற்கு இந்த துறையில் கைதேர்ந்தவர்கள் எல்லோரும் இணைந்து செயற்பட வேண்டும். ஓரிருவர் மட்டும் செயற்பட்டு ஒப்பேறாது. வெளிநாடுகளில் இவ்வாறான பிரச்சனைகள் கூர்மை அடைகின்ற பொழுது வெவ்வேறு

**"இன்று எங்களுடைய பிரச்சனையில் சாத்வீக ரீதியான போராட்டமும் பின் ஆயுதப் போராட்டமும் சர்வதேசத்தின் கண்களை திறந்தது மட்டுமல்ல அவர்கள் பங்காளிகளாக இந்த நாட்டினுடைய பிரச்சனையிலேயே தலையிடுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை கொடுத்துள்ளது"**

துறைசார்ந்த நிபுணர்கள் எல்லாம் அதில் கலந்து கொண்டு அதற்கான ஆயத்தங்களையும் பங்களிப்பையும் செய்திருக்கிறார்கள்.

நம்மைப் பொறுத்தவரையிலே இன்று ஐக்கிய நாடுகள் சபையை எங்களுடைய பிரச்சனைகள் சென்றடைந்திருக்கின்றன. வெளிநாடுகளில் நிபுணத்துவம் வாய்ந்த பலர் இருக்கின்றார்கள். அவர்களுடைய அனுசரணையையும் உதவியையும் பெற்றுக் கொள்வதோடு அவர்களோடு இறுக்கமான தொடர்பையும் ஏற்படுத்துவது அவசியம். அதன் மூலம் அந்தந்த நாடுகளுக்குள் அழுத்தங்களை பிரயோகிக்கலாம். அது மட்டுமல்ல அதன் மூலம் எமக்குத் தேவையான நிரந்தரமான தீர்வு பற்றி தெளிவாக்க சந்தர்ப்பம் இருக்கின்றது. ஆகவே இப்படியான சந்தர்ப்பத்திலே நாங்கள் ஒன்றில் தெளிவாக இருக்க வேண்டும். சமஷ்டிக்கான அந்த தீர்வை வைத்து நாங்கள் அரசியலுக்கு வருகிறோம். அரைகுறை தீர்வுகளை ஏற்றுக் கொள்வதற்காக அல்ல. இந்த மக்கள் செய்த தியாகத்திற்கு அது பெரும் சாபக்கேடாக இருக்கும். ஏனென்றால் மக்கள் மட்டுமல்ல தலைவர்கள், இளைஞர்கள் இப்படி பல்வேறுபட்டவர்களுடைய ஆவிகள் எம்மைத் திட்டும். ஏனென்றால் அவர்களுடைய தியாகங்களினால்தான் எங்களுடைய பிரச்சனையிலே சர்வதேச அரசுகளும் கவனம் செலுத்த வேண்டிய கடப்பாட்டுக்கு வந்திருக்கின்றன. ஆகவே இந்தப் பிரச்சனையிலே நாம் முனைப்புடன் செயற்படுகின்ற பொழுது தென்னிலங்கை அரசை வலியுறுத்துகின்ற சர்வதேச இந்திய, அமெரிக்கா போன்ற நாடுகளும் தெளிவாக எங்களுடைய தீர்வு இதுதான் என்று சொல்ல வேண்டிய கடப்பாடு ஏற்படும்.

"ஒன்றுமில்லாது ரோட்டிலை நிற்காதையுங்கோ. வருகிறதை கொஞ்சம் எடுங்கோ. இப்ப கொஞ்சம், அடுத்து கொஞ்சம், அதற்கு அடுத்து கொஞ்சம்" என்று அவர்கள் தங்களுடைய நலனுக்காக ஒரு இடைக்கால தீர்வுக்கு போங்கள் என்று சிலவேளை சொல்லுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை செல்வா அவர்கள் பண்டாரநாயக்கா அவர்களுடன் ஒப்பந்தம் எழுதுகிற பொழுது சொன்னார் "நாங்கள் சொல்கிற தீர்வு இதுவல்ல. எமது தீர்வு சமஷ்டி. ஆனால் இதொரு தற்காலிக ஏற்பாடு." பண்டா–செல்வா ஒப்பந்தம் மட்டுமல்ல, டட்லி–செல்வா ஒப்பந்தம் மட்டுமல்ல, பின் வந்த அத்தனையும் ஒரு தற்காலிக ஏற்பாடுகளே. இன்றைக்கு நாங்கள் எந்தவித தற்காலிக ஏற்பாடுகளுக்கும் போகின்ற சூழல் இல்லை. ஏனென்றால் இன்று நிலவும் சர்வதேச ரீதியான தலையீட்டுச் சூழலில் நாங்கள் இந்த சந்தர்ப்பத்தை தவறவிட்டோம் என்றால் இன்னொரு சந்தர்ப்பம் வரும் என்பது கனவாகும். ஏனென்றால் உலகத்திலே எத்தனையோ பிரச்சனைகள் இருக்கின்றன. தென்கொரியப் பிரச்சனை, சீனப் பிரச்சனை, மத்தியகிழக்குப் பிரச்சனை என்று எத்தனையோ பிரச்சனைகள் இருக்கின்றன. அவற்றோடு ஒப்பிடும்போது எங்களுடைய பிரச்சனை காத்திரமான இடத்தைவிட்டு தவறிப் போகலாம். ஆகவே எப்போதும் எங்களுடைய பிரச்சனைக்கு முன்னுரிமை கொடுப்பார்கள் என்று நினைப்பது தவறு. ஆகவே இந்தச் சந்தர்ப்பத்திலே நாங்கள் ஒன்றில் தெளிவாக இருக்க வேண்டும். உறுதியாக இருக்க வேண்டும்.

பெரும்பான்மைக் கட்சிகளைப் பொறுத்த வரையிலே அவர்கள் ஒற்றையாட்சியில்தான் இருக்கின்றார்கள். அதிகாரப்பகிர்வு அவர்களுடைய அகராதியிலே இல்லை. அந்த அதிகாரப்பகிர்வின் மூலம் ஒரு சமஷ்டியைத் தருவதற்கு தயாரான நிலையிலும் அவர்கள் இருக்கவில்லை. ஒரு சமயம் அந்த சமயோசித புத்தியை பயன்படுத்தி ஒற்றையாட்சியும் வேண்டாம் சமஷ்டியும் வேண்டாம் என்ற சொற்பிரயோகத்தை பாவித்து ஒரு தீர்வை எங்கள் மீது திணிக்கலாம். ஆனால் அது நடைமுறைச் சாத்தியமாக எங்களுடைய பிரச்சனைக்குத் தீர்வாக அமையுமா என்பது தான் என்னுடைய கேள்வி. "நீங்களாக வற்புறுத்தாதீர்கள். இப்பொழுது இதை எடுங்கள். இதற்கு பிறகு அப்புறம் பார்ப்போம்" என அந்த சந்தர்ப்பத்திலே இந்தியாவோ, அமெரிக்காவோ மற்றைய நேச நாடுகளோ எங்களுக்கு அறிவுறுத்தலாம்.

ஆகையினாலே எங்களுடைய தீர்ப்பு என்ன தான் என்பதை 1949 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 வரை நாங்கள் வலியுறுத்தி வந்துள்ளோம். மக்களுடைய ஆணையைப்பெற்று மக்களுடைய தியாகத்துக்கு விடிவாக ஏற்றுக்கொண்ட தீர்வு இதுதான் என்று சர்வதேசத்துக்கும் தென்னிலங்கைக்கும் எடுத்துக்கூற வேண்டிய சந்தர்ப்பம் இது. அந்தச் சந்தர்ப்பத்திலே நாங்கள் தென்னிலங்கை அரசின் மனோநிலையை சரியாக புரிந்து கொள்ள வேண்டும். அதிகாரப்பகிர்வுக்கும் சமஷ்டி அரசியலுக்கும் அவர்கள் பங்களிப்புச் செய்ய தயங்குவார்கள். ஆகையினாலே வெளியுலகத்தினுடைய அனுசரணையையும், மத்தியஸ்தத்தையும் பெற்று எங்களுடைய நலனை பாதுகாக்க வேண்டியதுதான் காலத்தினுடைய தேவையும் கட்டாயமும் ஆகும். ஆகவே இந்தச் சாத்வீகப் போராட்டத்திலும் ஆயுதப் போராட்டத்திலும் இதற்காக தங்கள் இன்னுயிரை ஆகுதியாக்கியவர்கள், கொல்லப்பட்டவர்கள், மரணித்தவர்கள் எல்லோரினுடைய ஆத்மாக்களும் சாந்தி அடைய நாங்கள் செய்யும் பரிகாரம் இதுதான். ●

---

(09 ஆம் பக்க தொடர்ச்சி)

ஆளுநரும் வடக்கு பிரதம செயலரும் சேர்ந்து முதலமைச்சருக்கும் – வடக்கு மாகாண சபைக்கும் எப்படி முட்டுக்கட்டை போடலாம் – தொல்லைகள் கொடுக்கலாமோ அப்படி எல்லாம் கொடுத்தார்கள். பிரதம செயலரை மாற்றுமாறு கேட்டு முன்னாள் நீதியரசரே நீதிமன்றை நாடினார். ஆனாலும் பலன் பூச்சியம்தான்.

வெறுமனே கழிந்தது காலம், மத்தியில் ஆட்சியும் மாறியது. இனி மாநிலத்தில் காட்சிகள் மாறும் என்று எண்ணியவர்களுக்கு வெறும் ஏமாற்றமே மிஞ்சியது. தமிழரசுக் கட்சியின் புண்ணியத்தில் ஆட்சியேறிய ஐ.தே.க. தேசிய அரசாக மலர்ந்தது. ஆளுநர் மாறினார். மத்திய அரசுக்கு பொழுது போகாத சமயங்களில் வட மாகாண சபைக்குள் பிளவுகளை ஏற்படுத்தி அங்கு நடந்த கூத்துக்களை ரசித்தது. மாகாண சபை ஆட்சியில் இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதை கைகொட்டி ரசித்தது. இப்போது புதிய அரசமைப்பு குறித்துப் பேசப்படுகின்றது. இதன் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுமா? என்பது சந்தேகமே. ஆனால் 13 இற்கு சாவுமணி அடிக்கப்படும் என்பதே உண்மை.

**இனப்பிரச்சினை தீர்வுக்காக வந்த 13 ஆம் திருத்தச் சட்டம் 30 ஆண்டுகளை கடந்து விட்டபோதும். பாதிக்கப்பட்ட சிறுபான்மைக்கு ஒருபோதும் நன்மைகள் கிட்டவில்லை. கிடைத்தவைகளும் நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாகவும் – பேரினவாதத் தீயிலும் சிக்கி எட்டாது போயின. மாறாக தென்னிலங்கை அரசியல் வாதிகள் இனவாதம் கக்கி பதவிகளைக் கைப்பற்றவும், வருங்கால அரசியல்வாதிகளை வளர்க்கும் பயிற்சி களமாகவும் மாற்றிக் கொண்டது. கடந்த 30 ஆண்டுகளில் முழுமையாக அமுலாகாது – குறுகிய காலமே அதிகாரப் பரவலாக்கம் மூலம் ஆட்சி அமைக்கப் பட்டுள்ளது. 13 இன்று முதிர்கன்னியாகி சேடம் இழுத்துக் கொண்டிருக்கிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இந்த ரோஹிங்யா முஸ்லீம்கள்?

ரோஹிங்யா முஸ்லிம்கள் மியான்மார் நாட்டின் மேற்கில் உள்ள ராகைன் மாகாணத்தில் வாழ்ந்து வரும் மக்கள் கூட்டத்தினர். ஆனால் அம்மக்களை வங்காளிகள் எனவும் வந்தேறு குடிகள் எனவும் மியான்மார் அரசாங்கம் கருதி வருகிறது. அவர்களுக்கு மியான்மாரில் குடியுரிமை இல்லையெனவும் கூறி வருகிறது. இது மியான்மாரில் உள்ள இனவாத பௌத்த கொள்கைகளின் ஒரு வெளிப் பாடாகும். இதனை எம்மவரில் சிலரும் நம்பி ரோஹிங்யா முஸ்லிம்கள் மீது மியான்மார் அரசின் வன்முறைகளுக்கு வக்காலத்து வாங்கி வருகிறார்கள். முகநூல் போன்ற சமூக வலைத்தளங்களில் அப்படியான கருத்துக்களை வெளி யிடுகின்றார்கள். ரோஹிங்யா அகதிகளை இலங்கை யினுள் அனுமதிக்கக் கூடாதென இலங்கைப் பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். மியான்மார் அரசுக்கும் தமது ஆதரவையும் தெரிவிக்கிறார்கள். இந்த ரோஹிங்யா மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அரச இனவழிப்புக்கான காரணங்களை கதைப்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

கரையோர மாகாணமாகிய ராகைன் கி.பி 8 ஆம் நூற்றாண்டு முதலே அராபிய வர்த்தகர்களின் தாக்கத் துக்கு உட்பட்டு வந்துள்ளது. அன்று இம்மாகாணம் அரகன் என அழைக்கப்பட்டது. அரேபிய வர்த்தகர்களின் இஸ்லாம் மதத்தால் கவரப்பட்ட அரகன் மக்களில் பெரும்பான் மையினர் இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொண்டனர்.

கி.பி 1430 ஆண்டில் வங்கதேச மன்னன் ஜலாலுதீன் முகமது, வலிகான் எனும் தளபதி தலைமையில் அரகன் மாகாணத்தைக் கைப்பற்ற படைகளை அனுப்பினான். அரகனைக் கைப்பற்றிய வலிகான் அம்மாகாணத்தின் அரசனாகத் தன்னையே பிரகடனப்படுத்திக் கொண்டான். அங்கு முஸ்லிம் சமூக அமைப்புக்களையும், முஸ்லிம் நீதி மன்றங்களையும் நிறுவினான். இந்த வரலாற்று ஆவணங் களில் இருந்து அரகனின் முஸ்லிம்கள் பல நூற்றாண்டு களாக வாழ்ந்து வந்துள்ளனர் என்று புலனாகிறது. மியான் மார் அரசு சொல்வது போல இவர்கள் ஆங்கிலேயரால் கொண்டு வரப்பட்ட வந்தேறு குடிகள் அல்ல என்பதும் தெளிவாகிறது.

**இன்று ராகைனில் ஏறத்தாள 1.1 மில்லியன் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகிறார்கள். எவ்வாறு இலங்கையின் வடக்கு கிழக்கிலுள்ள சிறுபான்மை தமிழ்மக்களால் பெரும் பான்மை சிங்கள இனம் பாதிக்கப்பட்டு விடும் என்று பெரும் பான்மை அரசு பயப்பிராந்தி அடைகிறதோ அவ்வாறே ரோஹிங்யா சிறுபான்மையினரால் பெரும்பான்மை பௌத்த இனம் அழிந்துவிடுமென மியான்மார் அரசு கருதுகிறது. இலங்கையிலும் மியான்மாரிலும் ஆட்சியாளர் கள் தமது இருப்பைத் தங்க வைத்துக் கொள்ள இப்பயப் பிராந்தியைத் திட்டமிட்டே பெரும்பான்மை பௌத்தர்கள் மத்தியில் பரப்பினார்கள். அதில் வெற்றியும் கண்டார் கள். இன்று இவ்விரு நாடுகளிலும் பெரும்பான்மை இன மக்கள் தமது அரசாங்கங்கள் சிறுபான்மை இனங்களின் மீது கட்டவிழ்த்து விடும் இனவழிப்பை நியாயப்படுத்தும் துரதிஷ்ட நிலையிலுள்ளனர்.**



லிங்கம்

ராகைன் மாகாணத்தில் உள்ள பௌத்தர்களை முஸ்லிம்கள் கொல்வதாக மியான்மாரின் அரசாங்கம் பிரச்சாரப்படுத்தி வருகிறது. இவற்றையெல்லாம் காரணம் காட்டி இம்மக்களின் குடியுரிமையை 1982 ஆம் ஆண்டு பறித் துக் கொண்டது. அன்றிலிருந்து ரோஹிங்யா முஸ்லிம் கள் நாடற்றவர்களாகி அல்லல்படுகிறார்கள். எந்த அரச உதவிகளும் கிடைப்பதில்லை. ஓர் ஊரில் இருந்து இன்னோர் ஊருக்கு செல்வதானாலும் இராணுவ அனுமதி பெறவேண்டும். முஸ்லிம்களுக்கு ராகைன் மாகாணம் ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலை போலவே உள்ளது.

தமது மக்களின் மீதான இராணுவ அடக்கு முறைகளுக்கு முகம் கொடுக்க முஸ்லிம் இளைஞர்கள் முற்பட்டனர். தமது மக்களின் குடியுரிமையைக் கோரியும் சுயநிர்ணய உரிமையைக் கோரியும் போராட முற்பட்டனர். அரகன் ரோஹிங்யா மீட்பு இராணுவம் (Arakan Rohingya Salvation Army) என்ற பெயரில் ஒரு இயக்கத்தை ஆரம் பித்தனர். 2012 ஆம் ஆண்டில் பொலிஸார் மீது ஒரு தாக்குதலை மேற்கொண்டனர். இதனையடுத்து நடந்த இனக்கலவரத்தில் இராணுவத்தினராலும் பௌத்தர் களாலும் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரக்கணக்கானவர்கள் அகதிகள் ஆக்கப்பட்டனர். பலர் பங்களாதேசுக்கு அகதிகளாக வந்து சேர்ந்தனர்.

எல்லா அடக்குமுறை அரசுகளும் சொல்வது போலவே மியான்மார் அரசாங்கமும் ARSA அமைப்பை ஒரு பயங்கரவாதாத அமைப்பாக முத்திரை குத்த முயற்சிக் கிறது. இவர்கள் முஸ்லிம்களாக இருப்பது அரசுக்கு இன்னும் இலகுவாகப் போனது. இவ்வமைப்புக்கும் அல்கொய்தாவுக்கும் தொடர்பிருப்பதாக பிரசாரப்படுத்து கிறது. இதன் மூலம் சர்வதேச அரசாங்கங்களை தன்பக்கம் இழுக்க முற்படுகிறது. இதில் கணிசமான அளவு வெற்றியும் அடைந்து வருகிறது. ரோஹிங்யா முஸ்லிம் களின் குடியுரிமைக்கும் சுயநிர்ணய உரிமைக்குமான நியாயமான கோரிக்கையை வலுவிழக்கச் செய்ய முற்படுகிறது. ARSA சக்தி வாய்ந்த ஆயுதங்களுடன் பயிற்சி பெறுவதாக போலிப்படங்களை வெளியிடு கிறது. ARSA ரோஹிங்யா மக்களின் குடிசைகளுக்கு தீ வைப்பது போன்ற படங்களை வெளியிடுகிறது. அவ்வாறு வெளியிடப்பட்ட படங்கள் போலியானவை என அண்மையில் BBC இனால் ஆதாரங்களுடன் நிரூபிக் கப்பட்டுள்ளன.

மேலும் கடந்த ஆவணி 25 ஆம் திகதி பொலிஸார் மீது நடத்தப்பட்ட தாக்குதல் வெறும் கத்தி கள் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட நாட்டு வெடிகுண்டுகள் கொண்டே நடத்தப்பட்டுள்ளது. இதனை மியான்மார் அரசும் ஒத்துக்கொள்கிறது. இத்தாக்குதலில் 12 பேர் பலியானார் கள். அதனையடுத்து கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை களால் பல ரோஹிங்யா கிராமங்கள் எரியூட்டப்பட்டன. இலட்சக்கணக்கானவர்கள் பங்களாதேசுக்கு அகதிகளாக சென்றுள்ளனர். அங்கு நடப்பது ஒரு இனச்சுத்திகரிப்பு என ஐ.நா கூறியுள்ளது.

ரோஹிங்யா முஸ்லிம்களின் இன்றைய நிலை ஈழத் தமிழரின் ஆயுதப் போராட்ட ஆரம்ப காலகட்டத்தில் இருந்த நிலையை ஒத்தது. இதனைச் சுட்டிக்காட்டி நிமிர்வு வைகாசி 2017 இதழில் ஒரு கட்டுரை வெளிவந்திருந்தது. பிராந்திய அரசுகளின் போட்டிகளில் சிக்கி எவ்வாறு ஈழத் தமிழர் போராட்டம் பெரும் இனவழிப்புக்கு உட்பட்டதோ அவ்வாறே ரோஹிங்யா முஸ்லிம்களின் போராட்டமும் இனவழிப்புக்கு வழிவகுத்துவிடும் என அஞ்சப்படுகிறது. சர்வதேச சமூகம் இன்னுமொரு இனவழிப்பைக் கண்டும் காணாமல் இருந்து விடமுடியாது.

அவ்வாறு இருந்தால் பாரதூரமான விளைவுகளை இம்மக்கள் மட்டுமல்ல அப்பிராந்தியமே எதிர்நோக்க வேண்டி வரும். மியான்மாரின் மாற்று அரசாங்கத்தின் தலைவியான ஆங்சான் சூகியைப் பாதுகாக்கும் நோக்கில் மேற்குலகமும் ஏனைய நாடுகளும் மியான் மாருக்கு எதிராக எந்தவொரு காத்திரமான நடவடிக்கை களும் எடுக்கவில்லை. வெறும் கண்டன அறிக்கைகளை மட்டுமே விட்டுக் கொண்டிருக்கின்றன.

அதேவேளை உலகெங்கிலுமுள்ள இஸ்லாமிய நாடுகள் தமது வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளன. இந்நாடுகளில் ஆயிரக்கணக்கான மக்கள் அணி திரண்டு கண்டன ஆர்ப்பாட்டங்களை நடாத்தியுள்ளனர். இம்மக்கள் வெறும் கண்டனத்துடன் நின்று விடுவதில்லை. ஆயுதம் ஏந்திப் போராடவும் தயங்குவதில்லை. அது தமது மார்க் கத்தின் ஒரு கடமையெனவே அவர்கள் கருதுகிறார்கள். உதாரணமாக ரஷ்யாவின் செசென்யா மாகாணத்தின் தலைவர் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு ஆதரவாக தனது பிரதேச மக்கள் போராட வேண்டும் என கூறியுள்ளார். இவ்வாறான கருத்தாக்கங்கள் ஐ.எஸ்.ஐ.எஸ் (ISIS) போன்ற இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புக்களுக்கு வரப்பிரசாதமாகப் போய்விடும்.

**இஸ்லாத்தில் அடிப்படைவாதத்துக்கும் மிதவாதத் துக்கும் இடையில் நடந்து கொண்டிருக்கும் போட்டியில் ரோஹிங்யாவையும் அடிப்படைவாதத்தின் கைகளில் தாரை வார்த்துக் கொடுக்கப்போகிறதா சர்வதேச சமூகம்? தென்கிழக்காசியாவில் ஒரு சிரியா உரு வாகுவதை ஏற்றுக் கொள்கிறதா? ஐ.நா அறிக்கைகளை மட்டும் வெளியிடுவதை விடுத்து மியான்மார் இராணுவத் தைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். இந்தியா, சீனா உள்ளிட்ட பிராந்திய அரசு களைக் கொண்ட ஒரு சமாதானப் படையை ராகைனுக்கு அனுப்ப முயற்சிகள் எடுக்க வேண்டும். ஐ.நா ராகைனில் நடப்பது இனச்சுத்திகரிப்பே என பிரகடனப்படுத்தியுள்ளது. இருப்பினும் இங்கு இனச்சுத்திகரிப்பு நடைபெறவில்லை என்று இராணுவத்துக்கு வக்காலத்து வாங்கும் மியான்மாரின் தலைவி ஆங்சான் சூகியைக் கண்டிக்க வேண்டும். அவர் மீதும் இராணுவத் தலைமைகள் மீதும் பொருளாதார ரீதியில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட வேண்டும். தான் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த போது சர்வதேசத் தின் உதவியை நாடிய ஆங்சான் சூகி இன்று சர்வதேசத் துக்கு முகம் கொடுக்கப் பயந்து வருடாந்த ஐ.நா கூட்டத் தொடருக்கே செல்லாமல் தவிர்த்தமையை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.**

மியான்மாரில் நடக்கும் ஜனநாயக மாற்றங்கள் தொடர்வதற்கு ஆங்சான் சூகி பாதுகாக்கப்பட வேண்டும் என மேற்குலகம் கருதுகிறது. ஆனால் இந்த இடைவெளியைப் பயன்படுத்தி இராணுவமும் இனவாதமும் பலப்படுவதை மேற்குலகம் புரிந்து கொள்ளத் தவறிவிடுகிறது. இதே போலவே ஜனாதிபதி மைத்திரியைப் பாதுகாக்கும் கொள்கைகளால் இலங்கையில் இனவாதம் பலப்படுவதை நாம் நேரே கண்டு கொண்டிருக்கிறோம். இது சர்வதே சத்துக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும். ஜனநாயக மாற்றங்களுக்கு நிபந்தனையுடன் கூடிய காலஅட்டவணை ஒன்று வழங்கப்பட வேண்டும். ஜனநாயகத்தை ஊக்கு விக்கிறோம் என்ற கோசம் மட்டும் ரோஹிங்யா மக்களுக்கு விடிவைக் கொண்டு வராது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் - சீனா உறவின் அவசியம்



கலாநிதி கே.ரி.கணேசலிங்கம்

சிறுபான்மை தேசிய இனங்களின் இருப்பு என்பது அந்த தேசிய இனத்தின் தந்திரோபாயத்திலே தங்கியுள்ளது. அத்தகைய தந்திரோபாயங்களை வகுப்பதும் அதில் தங்கியிருப்பதும் அதற்காகவே போராடுவதும் தேசிய இனங்களின் அரசியல் தலைமைகளிலேயே தங்கியுள்ளது. அரசியல் தலைமைகள் அதீத புத்திசாலிகளாகவோ, அரசியல் விற்பன்னர்களாகவோ இருப்பதில்லை. அவற்றை உருவாக்கும் அறிவை தாம் வாழும் சமூகத்தின் பாற்பட்டும் சர்வதேச சூழலலிருந்தும் பெற்றே உலகிலுள்ள அரசியல் தலைமைகள் மிளிர்கின்றன. அந்த வரிசையில் இலங்கைத் தமிழர் பின்பற்ற வேண்டிய மிக முக்கியமான உபாயங்களில் ஒன்றாக நாடுகளுடனான நட்புறவு காணப்படுகின்றது. பிராந்திய அரசியலும் சர்வதேச தளத்திலும் நாடுகளுடனான நட்பே தேசிய இனங்களின் இருப்புக்கு பாதுகாப்பளிக்கக்கூடியது. அந்த வகையில் இலங்கைத் தமிழரும் சீனாவுக்குமான உறவினை நோக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

சீனாவுடனான நட்புறவு இந்தியாவுக்கு விரோதமானது என்ற கணக்கறிக்கை ஒன்றினை தமிழ் அரசியல் தலைமைகள் வைத்துள்ளன. இந்திய-இலங்கை தமிழர் நட்புறவு மிக நீண்டது. வலிமையானது. புவிசார் அரசியல் தளத்தில் மிக இறுக்கமானது. ஆனால் சீனாவுடனான நட்பு மலர்வதென்பது சர்வதேச அளவில் மட்டுமல்ல பிராந்திய மட்டத்திலும் உள்நாட்டு மட்டத்திலும் சமநிலை வலுவடையக்கூடியளவுக்கு அமையக்கூடியது. அதனைவிட பொருளாதார தளத்திலும் நன்மை வகிக்கக்கூடியதாக சீன-இலங்கை தமிழர் நட்புறவு அமைய வாய்ப்புள்ளது.

இன்றைய உலக ஒழுங்கில் நாடுகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்பவையோ பகைத்துக் கொள்பவையோ கிடையாது. அவற்றை மீறிக் கொண்டு மோதுபவையாக அமைந்தால் அதன் அர்த்தம் பொருளாதார உறவு சாராத நாடுகளுக்கிடையிலான மோதலாகவே அது அமையும். காரணம் அரசுகள் ஒன்றில் ஒன்று அதிகமாக பொருளாதார ரீதியில் தங்கியுள்ளன. கடன், நன்கொடை, உற்பத்தி, வர்த்தகம், மற்றும் சந்தை எனும் தளத்தில் அதிக முக்கியத்துவம் உடைய உறவுகள் வளர்ந்துள்ளன. இந்த யுகத்தில் நட்புறவு என்பது நாடுகளுக்கு மட்டுமுரியவையல்ல. தேசிய இனங்களின் நலனுக்குமானவை.

சீனாவுடனான நட்புறவு முதலில் உள்நாட்டு மட்டத்தில் பலமானதாக அமையும். இலங்கையின் வெளியுறவுக் கொள்கை பிரித்தானியாவிலிருந்து, அமெரிக்காவிடம் மாறியது போல் தற்போது சீனாவுடன் நெருக்கமாகியுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் சீனாவின் செல்வாக்கு தனித்து தென் இலங்கையை மட்டும் பிரதிபலிக்கும் போது வடக்கு கிழக்கு அந்நியப்படுத்தப்படும். சீனாவின் பலம் தென் இலங்கையின் பலமாகப் பார்க்கப்படுவதை உடைக்க வேண்டும். இவற்றுக்கு இலங்கை தமிழர் சீனாவுடன் நட்புறவை வைத்துக்கொள்ளுதல் தவிர்க்கமுடியாதது. உலகத்திலுள்ள எல்லா நாடுகளுடனும் நெருக்கமான உறவை இலங்கை தமிழர் கொள்வதன் மூலம் தேசிய இன அடையாளத்தினை பாதுகாக்க முடியும்.

இரண்டாவது மிக முக்கியமான விடயம் சீனாவுடனான நட்புறவு இந்தியாவை இலங்கைத் தமிழர் மீது அதிக கரிசனையை காட்டச் செய்யும். தென் இலங்கை அவ்வாறே தனது பலத்தையும் நட்பினூடாக சமநிலையையும் தக்க வைத்து வருகிறது. இந்தியாவும் சீனாவும் இலங்கைத் தீவின் அரசியல் பொருளாதார இராணுவ பலத்தில் தவிர்க்க முடியாத சக்திகள் என்பதை மறுக்க முடியாது.

21 ஆம் நூற்றாண்டில் இந்திய-சீன நட்புறவினூடாகவே உலக நாடுகள் இயங்க முயலுகின்றன. இவற்றை தேசிய இனம் என்ற அடிப்படையில் இலங்கைத்தமிழர் பயன்படுத்த வேண்டும். தமிழ் தலைமைகளை நோக்கி சீனாவும் பல முயற்சிகளை நட்புறவின் அடிப்படையில் மேற்கொண்டு வந்தது. குறிப்பாக சீனத் தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகள் வடக்கு கிழக்கு நோக்கி வருதல், தமிழ்த் தலைவர்களை மற்றும் ஊடகவியலாளர்களை சீனாவுக்கு அழைத்தமை, மற்றும் புலமைப் பரிசில்களை அதிகம் வழங்கிவருபவை என்பவற்றை குறிப்பிட முடியும்.

சர்வதேச அரசியலிலும் சீனாவின் முக்கியத்துவம் எதிர்காலத்தில் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்ற அடிப்படையில் தமிழர்-சீனா உறவு மிக முக்கியமானது. இதனை தமிழ்த் தலைமைகள் பரிசீலிப்பது அவசியமான மாறுதலாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசியல் கைதிகள் போராட்டம் இனி?

துருவன்

அரசியல் கைதிகள் என்று எவருமே இலங்கைச் சிறைச்சாலைகளில் இல்லை என்று தொடர்ச்சியாக கூறி வந்த அரச தரப்பு இப்போது உண்மையை நாடாளுமன்றில் ஒத்துக் கொண்டுள்ளது. கடந்த 07.11.2017 செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றில் உரையாற்றிய நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள 17 அரசியல் கைதிகளே சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். இதன் மூலம் அரசு உத்தியோகபூர்வமாக அரசியல் கைதிகள் என்கிற வார்த்தையை உச்சரித்துள்ளது.

**அரசின் நிலைப்பாட்டு மாற்றம் தொடர்பிலும், அரசியல் கைதிகளின் போராட்டம் தொடர்பிலும் "அரசியல் கைதிகள் விடுதலைக்கான தேசிய இயக்கம்" எனும் அமைப்பின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை சக்திவேல் நிமிர்வுக்கு கருத்து தெரிவிக்கையில்,**

நீதி அமைச்சர் 17 அரசியல் கைதிகளே சிறையில் உள்ளதாக கூறியுள்ளார். நாடாளுமன்றில் நீதி அமைச்சர் இவ்வாறு கூறும் போது எதிர்க்கட்சியான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு "17 இல்லை 132 பேர் இருக்கிறார்கள்" என அதனை மறுத்து ஒரு வார்த்தை கூட தெரிவிக்க வில்லை. மஹிந்த இருக்கும் வரை பயங்கரவாத தடை சட்டத்துக்கு கையை தூக்கிய டக்ளஸ் தேவானந்தாவே அரசியல் கைதிகள் தொடர்பிலான கேள்வியையும் நாடாளுமன்றில் முன்வைத்தார். அப்போதே நீதியமைச்சர் இவ்வாறு கூறினார். அச்சமயத்தில் கூட டக்ளஸ் தேவானந்தா உண்மையான அரசியல் கைதிகள் எண்ணிக்கை இதுவல்லவே என மறுத்து கூற முன்வர வில்லை.

ஆனால், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நாங்கள் பெற்றுக் கொண்ட தகவலில் 132 அரசியல் கைதிகள் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கை அரசிடமே அரசியல் கைதிகள் தொடர்பில் இரட்டை நிலைப்பாடு உள்ளமை தெளிவாகிறது. மூன்று அரசியல் கைதிகளதும் போராட்டம் உச்சநிலைக்கு வந்த போது அதனை எங்கள் ஆட்களே சிதைத்து விட்டார்கள் என்பதனை என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

அரசியல் கைதிகளது போராட்டம் முடித்து வைக்கப்பட்ட நிலை தொடர்பில் பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சிவாஜிலிங்கம் ஆகியோர் மீது விமர்சனங்கள் உள்ளன. அரசியல் கைதிகளது விடயம் தொடர்பில் பேசுவதற்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கும், சிவாஜிலிங்கத்துக்கும் ஜனாதிபதி தனித்தனியே அழைப்பு விடுக்கிறார். இந்த இரண்டு தரப்பும் தனித்தனியே அழைத்தமையை ஏன் ஏற்றுக் கொண்டார்கள்? ஜனாதிபதியை சந்திக்க ஏன் தனித்தனியே போனார்கள்?

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற போராட்டத்தை அங்குள்ள 19 அமைப்புக்களை சேர்ந்தவர்கள் தான் ஒருங்கமைத்து இருந்தார்கள். ஜனாதிபதியை சந்திக்கச் சென்றவர்கள் ஏன் இந்த அமைப்புக்களோடு சந்தித்து பேசவில்லை? இதன் மூலம் இவர்கள் தங்கெளுக்கென்று தனியான நிகழ்ச்சி நிரல்களை வைத்து அரசியல் கைதிகள் விடயத்தில் பொறுப்பின்றி செயற்பட்டுள்ளார்கள் என்பது தெளிவாகிறது. அரசியல் கைதிகள் விடுதலையை வலியுறுத்தி பல்கலைக்கழக மாணவர்கள் வாசலைப் பூட்டும் முடிவை திடீரென எடுக்கின்றார்கள். இதனைக் கூட யாரிடம் கலந்தாலோசித்து அவர்கள் எடுத்தார்கள். என்று தெரியவில்லை. வாசலைப் பூட்டும் நிலை தொடருமாக இருந்தால் மாணவர்கள் கைது செய்யப்படும் நிலை ஒன்று இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 04.11.2017 சனிக்கிழமை அரசியல் கைதிகளின் போராட்டத்தை முடித்து வைக்க அங்கஜனும், சிவாஜியும் சேர்ந்து ஒன்றாகப் போகிறார்கள். இவர்களின் அரசியல் நிலைப்பாடுகள் தான் என்ன?

"போராடிய எல்லா அமைப்புக்களுக்கும் நன்றி கூறுங்கோ.... தொடர்ந்து எமக்கு விடுதலை கிடைக்கும் வரை எல்லா அமைப்புக்களையும் ஒன்று சேர்ந்து போராட சொல்லுங்கோ பாதர்" என்று உண்ணாவிரதம் முடித்து வைக்கப்பட்ட அன்று அரசியல் கைதிகள் என்னிடம் கூறினார்கள். அவர்கள் ஒன்று சேர்ந்து போராடச் சொல்லியதன் அர்த்தம் இங்கே அமைப்புக்களிடையில் சிதைவில்லாமல், ஒற்றுமையுடன் போராட வேண்டும் என்கிற உண்மையை வலியுறுத்த வேண்டிய தேவையை அவர்கள் உணர்ந்து இருக்கலாம்.

அரசியல் கைதிகளை பொறுத்தவரையில் அவர்கள் போராட வேண்டிய உச்சக் கட்ட போராட்டத்தை நடாத்தி முடித்து விட்டார்கள். இனிப் போராட்டம் வெல்வது தமிழ்மக்களின் கைகளிலேயே தான் உள்ளது. ஆனால், தமிழ் மக்களின் அரசியல் சிதைவுநிலையில் தான் உள்ளது. பகட்டு நட்சத்திர அரசியல்வாதிகளையும், புல்லுருவிகளையும் இனம்கண்டு அகற்றினால் மட்டும் தான் நாங்கள் அடுத்த கட்டத்துக்கு போகலாம்.

2009 வரையும் வடக்குக்கு வராத தெற்கு அரசியல் கட்சிகளான ஜேவிபி, சோஷலிச முன்னணி உட்பட பல கட்சிகள், அமைப்புக்கள் தற்போது வரத் தொடங்கியுள்ளன. இதற்கு காரணம் தமிழ் மக்களின் அரசியல் சமூகம் ஒரு முதிர்ச்சி நிலைக்கு வரவில்லை. அப்படி இருந்தால் அரசியல் ரீதியாக எங்களால் ஒரு தடுப்பரண் அமைக்க முடியும். இந்த ஓட்டைகளை நாங்கள் அடைத்தால் தான் அரசியல் கைதிகளின் விடுதலையும் சாத்தியமாகும். எங்களின் அரசியலையும் தொடர முடியும்.

எந்த முடிவும் கிடைக்காமல் இந்தப் போராட்டம் சதி முயற்சி ஒன்றின் மூலமே முடித்து வைக்கப்பட்டதாக நான் கருதுகிறேன். அரசியல் கைதிகள் போராட்டம் திடீரென முடித்து வைக்கப்பட்டமை பற்றியும் கடந்த ஒரு மாதமாக இடம்பெற்ற போராட்டங்கள் தொடர்பிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டும். உண்மையில் என்ன நடந்தது என்பதனை சம்பந்தப்பட்டவர்கள் இந்த தமிழ் சமூகத்துக்கு தெளிவுபடுத்த வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊடகங்களுக்கு அறிக்கை விடுவதுடன் தங்களது செயற்பாடுகளை முடக்கி விடுகிறார்கள். ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது அரசியல் கைதிகளை தமிழ் சமூகமாகிய நாம் தான் ஏமாற்றி விட்டோம் என்றார்.

**"அரசியல் கைதிகளை பொறுத்தவரையில் அவர்கள் போராட வேண்டிய உச்சக் கட்ட போராட்டத்தை நடாத்தி முடித்து விட்டார்கள். இனி போராட்டம் வெல்வது தமிழ்மக்களின் கைகளிலேயே தான் உள்ளது. ஆனால், தமிழ் மக்களின் அரசியல் சிதைவுநிலையில் தான் உள்ளது"**

### தேவையற்ற அரசியல் தலையீடுகள் தான் எங்களை இந்த நிலைக்குத் தள்ளின

இது தொடர்பில் யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் வ.அனுராஜ் அவர்களிடம் மாணவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கேட்ட போது,

உடனடியாக இந்த போராட்டத்தை நாங்கள் முடித்து வைக்க வேண்டி இருந்தது. அதற்கு முக்கிய காரணம் இக்கட்டான நிலைக்குச் சென்ற அரசியல் கைதிகளின் உடல்நிலையே ஆகும். ஒருவரின் உடல்நிலை பயங்கரமான நிலைக்கு சென்றுவிட்டது. அதனை விட அவர்களின் உடல் உறுப்புக்கள் செயலிழக்கும் நிலைக்கு சென்று விட்டன. அரசாங்கமும் உடனே தீர்வு தருவதாக இல்லை. அந்த நேரத்தில் யாராவது ஒருவரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமாக இருந்தால் நாங்கள் அவர்களுக்காக போராடுவதில் என்ன பிரயோசனம்? அந்த அடிப்படையில் தான் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம். அதை தவிர வேறு எந்த நோக்கமும் இல்லை. நாங்கள் தொடர்ந்தும் பல போராட்டங்களை வேறு வடிவங்களில் முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம்.

பல்கலைக்கழக வாயிலை பூட்டுவது என்று எடுத்த முடிவு பல்கலைக்கழகத்தோடு சம்பந்தப்பட்ட விடயம் தானே. இதில் பொது அமைப்புக்களையும் சேர்த்து முடிவெடுத்தால் பிரச்சினை வேறு விதமாக திரும்பியிருக்கும். அதனை தவிர்க்கவே விரும்பினோம்.

சில பொது அமைப்புக்கள் சில அரசியல் கட்சிகளைச் சார்ந்து உள்ளன. சில பொது அமைப்புக்களும், அதில் அங்கத்தவர்களாக உள்ளவர்களும் அரசியல் கட்சிகளுடன் இணைந்து கூட்டங்களை ஒழுங்குபடுத்தியுள்ளனர். ஒரு சில கட்சிகளை அவர்கள் தூக்கி வைக்கின்றனர். சில அமைப்புக்கள் சார்ந்தவர்களின் கருத்துக்கள் கட்சிகளுக்கு சார்பாக உள்ளனவே தவிர, நோக்கத்தை நிறைவேற்றுவதில் அல்ல. அதனால் சில பொது அமைப்புக்களுடன் நாங்கள் இணைந்து செயற்படுவது என்பது சில கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதான விம்பத்தை வெளியில் ஏற்படுத்தும். அது சமூகத்தில் எம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதான பார்வையையும் போராட்டத்தின் நோக்கத்தையும் திசை திருப்பும். பொது அமைப்புக்கள் என்பது எந்தப் பக்கமும் சாராமல் சீரிய வழியில் செயற்பட வேண்டும். அப்போது தான் அவற்றுடன் இணைந்து செயற்பட முடியும்.

அருட்தந்தை சக்திவேல் இந்தப் போராட்டங்களை மேற்கொள்வது தொடர்பிலான பல்வேறு ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் தந்துள்ளார். தொடக்கம் முதல் இந்த நிமிடம் வரை தொடர்பில் இருந்து வருகிறார். நாங்கள் இந்த விடயம் தொடர்பில் அமைப்புக்கள், புத்தியீவிகளுடன் கலந்தாலோசிக்கவில்லை என்பதனை ஏற்றுக் கொள்ள முடியாது. நாங்கள் இந்த விடயம் தொடர்பில் அருட்தந்தை சக்திவேல் மற்றும் துறைசார் பேராசிரியர்கள், சட்டத்தரணிகள், அமைப்புக்களின் தலைவர்களுடன் நேரிலும் தொலைபேசி மூலமும் பேசி பல்வேறு அபிப்பிராயங்களையும் பெற்றிருக்கிறோம்.

சில அரசியல் கட்சிகள் நாங்கள் முன்னெடுக்கும் போராட்டங்களுக்கு இடையில் நுழைந்து தாங்கள் செய்வதாக காட்டிக் கொள்வது எங்களுக்கு பிடிக்கவில்லை. தேவையற்ற அரசியல் தலையீடுகள் தான் எங்களை இந்த நிலைக்கு தள்ளின. மற்றும்படி பொது அமைப்புக்களும் தேவை, புத்தியீவிகளும் தேவை இதில் எவ்வித மாற்றுக் கருத்துக்களுக்கும் இடமில்லை என்றார்.

**இறுதி நோக்கத்தை அடையும் வரை எல்லோரும் இணைந்து செயற்படுவது தான் ஆரோக்கியமானது**

எமது சமூகத்தின் மீது அக்கறை கொண்டு போராட முன்வருபவர்களில் பெரும்பாலோனோர் ஏதோ ஒரு கட்சியிலோ அல்லது அமைப்பிலோ முன்னர் செயற்பட்டவர்களாகவோ அல்லது தற்போது செயற்படுபவர்களாகவோ இருப்பது தவிர்க்க முடியாதது. ஆனால், ஏனையோர் சமூக அக்கறை இன்றி அல்லது போராட்டத்தில் நம்பிக்கை இழந்து இருக்கும் போது அக்கறையுடனும் நம்பிக்கையுடனும் போராட முன்வருபவர்கள் இவர்களே. துரதிஷ்டவசமாக இவர்களிடமுள்ள தனிமனித குறைபாடுகள் காரணமாக அறிந்தோ அறியாமலோ தாம் சார்ந்த அமைப்புக்களை முன்னிறுத்த முற்படலாம். அல்லது எமது மக்களிடமுள்ள குழுவாத மனப்பான்மை காரணமாக இவர்கள் கலந்து கொள்ளும் போராட்டங்களை ஒரு குழுவுடன் தொடர்புபடுத்தி அப்போராட்டத்தை முத்திரை குத்தி புறக்கனிக்கும் போக்கும் எம்மக்களிடம் காணப்படலாம்.

இந்த நிலை மாற பல ஆண்டுகள் எடுக்கும். அது வரை எமது போராட்டங்கள் இந்த குழுவாதத்தால் சிதறடிக்கப்படுவதைத் தாங்கிக் கொள்ளவதற்கு எம்மினத்துக்கு திராணி இல்லை. பேரினவாத அரசு எம்மக்கள் மீது எல்லையற்ற அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட முன்னிற்கிறது. அதற்கு எதிராக எம்மைப் பாதுகாத்து நிற்கும் வேலிகள் இப்போராட்டங்களே. ஓட்டை விழுந்த பலமற்ற வேலிகளாக அவை இருப்பினும் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட நிலையில் எமது மக்களின் நலனுக்காக எஞ்சியிருப்பவை இவை மட்டுமே. அவற்றையும் கட்சி அரசியலையும் குழுவாத அரசியலையும் காரணம் காட்டி சிதைந்து போக விடுவது கவலையளிக்கிறது.

> **“பேரினவாத அரசு எம்மக்கள் மீது எல்லையற்ற அடக்குமுறைகளைக் கட்ட விழ்த்து விட முன்னிற்கிறது. அதற்கு எதிராக எம்மைப் பாதுகாத்து நிற்கும் வேலிகள் இப்போராட்டங்களே”**

போராட முன்வரும் சக்திகள் கட்சிவாதம், குழுவாதம் என்பவை எம்மக்கள் மத்தியிலுள்ள தீர்க்கப்படவேண்டிய பிரச்சனைகள் என்பதை அங்கீகரிக்க வேண்டும். அவை தீர்க்கப்படும் வரை பொறுத்திருக்க முடியாது. ஆனால், இப்பிரச்சனைகளை எவ்வாறு கையாளப் போகிறோம் என்பதை நன்கு திட்டமிட்ட பின்னர் போராட்டங்களை முன்னெடுக்க முடியும். ஒவ்வொரு போராட்டத்துக்கும் நன்கு கட்டமைக்கப்பட்ட தலைமைக்குழுவை உருவாக்க வேண்டும். அத்தலைமைக் குழு கட்சிகளும் அமைப்புக்களும் அவற்றைச் சார்ந்த நபர்களும் போராட்டத்தில் தமது நலன்களை முன்னிறுத்த இடங்கொடுக்காத வகையில் நடைமுறைகளை புத்தி சாதுரியத்துடன் திட்டமிட வேண்டும். இது ஒன்றும் இயலாத காரியமல்ல. போராட முன்வருபவர்கள் மக்கள் மீது தாம் கொண்ட பற்றினாலேயே போராட வருகிறார்கள். இவ்வுணர்வாளர்களைப் போற்றுவோம். நீண்ட போராட்ட வரலாற்றைக் கொண்ட எமக்கு அவர்கள் சகலரையும் ஒன்றிணைக்கக் கூடியவாறு புத்திக் கூர்மையுடன் திட்டங்களைத் தீட்டி போராட்டங்களை முன்னெடுக்கக் கூடிய சகல திறமைகளும் உள்ளன. இதனை உணர்வாளர்களும், பல்கலைக்கழக மாணவர்களும், புத்தியீவிகளும் உணரவேண்டும் என்பதே தமிழ் மக்களின் கோரிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிடலை வாழவைத்த முருங்கை




**மணிகண்டன்**

சாதாரணமாக ஒவ்வொருவர் வீட்டுக் கோடிகளிலும், வெறும் காணிகளிலும் முருங்கை மரத்தை நாட்டி வைத்திருப்போம். அதன் மூலம் ஆகக் கூடிய பயன்களாக நாம் முருங்கைக்காய் கறியையும், இலை வறையையும் தான் செய்து சாப்பிட்டிருப்போம். ஆசியாவிலிருந்து உலகெங்கும் பயணிக்கும் முருங்கையை இலவசமாக பெறும் நம் மக்கள் அதன் பெறுமதியை உணராமை தான் வேதனையளிக்கிறது.

இதனை எல்லாம் தாண்டி முருங்கை மரத்தின் சகல பகுதிகளும் ஏதோ ஒரு வகையில் நமக்கு பயன்படும் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? மருத்துவ பொக்கிஷத்தை எங்கள் கோடிகளில் வைத்துக் கொண்டு அதன் முழுமையான பயன்களை நாம் அறியாது இருப்பது தான் வேதனையானது. எத்தனையோ நோய்களுக்கு முருங்கை சிறந்த தீர்வைக் கொடுக்கிறது.

**பிடல் காஸ்ரோவை நோயிலிருந்து காப்பாற்றிய முருங்கை**

மறைந்தகியூபத்தலைவர் பிடெல்காஸ்ட்ரோவுக்கு முதுமையில் ஏற்பட்ட நோயிலிருந்து விடுபடப் பெரிதும் உதவியது முருங்கை. காஸ்ட்ரோவின் கெரில்லா படைத் தளபதி சே குவேரா, மெக்சிகோ நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட முருங்கையைக் கியூபாவில் அறிமுகம் செய்தார். அதன்பிறகு பிடல் காஸ்ட்ரோ தன் வீட்டின் அருகே முருங்கைத் தோட்டத்தை வளர்த்து வந்தார். முதுமையில் தன்னைக் காப்பாற்றிய முருங்கை தாவரத்தின் அற்புதத் திறன்கள் பற்றி, தன் நாட்டு மக்களிடையே காஸ்ட்ரோ உரையாற்றியுள்ளார். அதை அதிசயமான தாவரம் என்று புகழ்ந்து பேசியது மட்டுமல்லாமல், வீடுதோறும் முருங்கை மரத்தை வளர்க்கவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

அதற்குக்காரணம் முருங்கை இலையில் பொதிந்து கிடக்கும் 46 வகையான எதிர் ஆக்சிகரணிகள் (Anti oxidant), 36 தாபிதங்களை (காய்ச்சல்) நீக்கும் வேதி பொருட்கள், விட்டமின்கள், 18 வகை அமினோ அமிலங்கள், கனிம உப்புகள் ஆகியவையே.

வறுமை செல்வம் என்று பார்க்காமல் கண்ணில் தென்படும் உயிரை எல்லாம் காப்பாற்றியது முருங்கை. முரி எனும் சொல் ஒடிதல், கெடுதல் எனப் பொருள்படும். முருங்கு என்னும் சொல் முரி என்னும் சொல்லோடு தொடர்புள்ளது. முருங்குவது, அதாவது எளிதில் ஒடியக் கூடிய கிளைகளை கொண்டதே முருங்கை மரம் ஆகும். ஆங்கிலத்திலும்கூட, தமிழ் பெயராலேயே அழைக்கப்படும் சிறப்பையும் கொண்டிருக்கிறது.

காஸ்ட்ரோ மட்டுமில்லை, முருங்கையால் உலக நாடுகள் பெற்ற பயன்கள் ஏராளம். உலகில் மிகவும் வறுமையான நாடுகள் பட்டியலில் உள்ளது ஹையிட்டி. அங்கு 2010 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலநடுக்கம், 2012 இல் ஏற்பட்ட கடுமையான சூறாவளியால் அந்நாடு மோசமான வறுமையின் பிடியில் தள்ளப்பட்டது. பச்சிளங் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் அவதிக்கு உள்ளானார்கள். கடைசியில் முருங்கையிலை மாவைத் தொடர்ந்து உட்கொண்டதால், அந்நாட்டு மக்கள் உயிர் பிழைத்தார்கள். இதனால் ஹையிட்டி அரசு ஒவ்வோர் ஆண்டும் யூன் 5 ஆம் தேதியைத் தேசிய முருங்கை நாளாகக் கொண்டாடி வருகிறது.

1997 ஆம் ஆண்டில் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்குச் சேர்ச் ஓஃப் வேர்ல்ட் சேர்வீஸ் நிறுவனம் முருங்கையிலை மாவை உணவாக வழங்கியபோது, அவர்கள் ஆரோக்கியம் பெற்றார்கள். கர்ப்பிணிப் பெண்களுக்குத் தினமும் ஆறு மேசைக்கரண்டி முருங்கை இலைப்பொடியை வழங்கியபோது, அவர்களும் ஆரோக்கியமான நிலையை அடைந்தார்கள். இது தொடர்பாக Lowell J Fugile என்பவர் ஆய்வு மேற்கொண்டு முருங்கையைப் பற்றி 'The miracle tree: The multiple attributes of Moringa' என்று விரிவான நூலையே எழுதியுள்ளார். இந்த ஆய்வில் பல விஷயங்கள் தெரிய வந்தன.

செனகல் நாட்டில் 'முருங்கை மருத்துவர்' என்றும், 'அது இருந்தால் மரணம் இல்லை' என்றும் சொல்கிறார்கள். இந்தப் பெருமைகள் அனைத்தையும் உடைய முருங்கையின் பயன்களை நாம் உரிய வகையில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருங்கை இலை 100 கிராமில் 92 கலோரி உள்ளது.

| | |
|---|---|
| ஈரப்பதம் | – 75.9% |
| புரதம் | – 6.7% |
| கொழுப்பு | – 1.7% |
| தாதுக்கள் | – 2.3% |
| இழைப்பண்டம் | – 0.9மூ |
| கார்போஹைட்ரேட்கள் | – 12.5மூ |

தாதுக்கள், விட்டமின்கள்,

| | |
|---|---|
| கல்சியம் | – 440 மி.கி |
| பொஸ்பரஸ் | – 70 மி.கி |
| அயன் | – 7 மி.கி |
| வைட்டமின் சி | – 220 மி.கி |

வைட்டமின் பி காம்ப்ளக்ஸ் சிறிய அளவில்

**நோய் தீர்க்கும் முருங்கை**

முருங்கை மரம் முழுவதும் மனிதனுக்கு பயனளிக் கிறது. முருங்கைப் பூ மருத்துவ குணம் கொண்டது. முருங்கை இலையை வேகவைத்து அதன் சாற்றை குடித்து வந்தால் உடல் சூடு தணியும். வெப்பத்தின் காரணமாக உடலில் ஏற்படும் மந்தம், உட்சூடு, கண்நோய் இவற்றை நீக்கும் குணம் படைத்தது முருங்கை இலை.

சத்து நிறைந்த முருங்கைக் காய் உடலுக்கு நல்ல வலிமையைக் கொடுக்க வல்லது. முருங்கைக்காய் பிஞ்சு ஒரு பத்திய உணவாகும். பிள்ளை பெற்ற தாய்மார்களுக்கு பத்தியத்தில் முதலிடம் வகிப்பது முருங்கைக் காயாகும். பாலூட்டும் தாய்மார் முருங்கை இலையை நன்றாக சாப்பிடுமாறு வைத்தியர்கள் அறிவுறுத்துவது அனைவரும் அறிந்ததே. இதில் கர்ப்பிணிகளுக்கு தேவையான கல்சியம், இரும்புச்சத்து, விட்டமின் உள்ளது. முருங்கை இலை சாறுடன் பால் கலந்து குழந்தைகளுக்கு கொடுத்தால், இரத்த சுத்தி ஏற்படும். எலும்புகளையும் வலுப்படுத்தும்.

முருங்கைப் பட்டையை நீர்விட்டு அரைத்து வீக்கங் களுக்கு போடலாம். முருங்கை இலையை உருவி காம்பு களை நறுக்கி விட்டு பின் மிளகு ரசம் வைத்து சாப்பாட் டுடன் சேர்த்து உண்டு வந்தால் கை, கால் உடம்பின் வலிகள் யாவும் நீங்கும். அதே வேளையில் சிறுநீரைப் பெருக்கும் தன்மை இதற்கு உண்டு.

முருங்கை இலைகளில் இரும்பு, தாமிரம், சுண்ணாம்புச் சத்து ஆகியவை இருக்கின்றன. இந்த இலைகளை நெய்யில் வதக்கி சாப்பிட்டால் ரத்த சோகை உள்ளவர்களின் உடம்பில் நல்ல ரத்தம் ஊறும். பல் கெட்டி படும். தோல் வியாதிகள் நீங்கும்.

முருங்கைப் பட்டை, உலோகச் சத்துக்கள் நிறைந் தது. உணவில் கலந்த விஷத்துக்கும் நரம்புக் கோளாறுக் கும் இது நல்ல மருந்து. கடுமையான ரத்த சீதபேதி, வயிற்றுப் புண், தலைவலி, வாய்ப்புண் ஆகிய வியாதிகளுக் கெல்லாம் முருங்கைக்காய் கை கண்ட மருந்து.

வாரத்தில் ஒருமுறையோ இரண்டு முறையோ முருங்கைக்காயை உணவாக உபயோகித்தால், ரத்தமும் சிறுநீரும் சுத்தி அடைகின்றன. வாய்ப்புண் வராதபடி பாது காப்பு உண்டாகிறது. முருங்கைக்காய் சூப் காய்ச்சல், மூட்டு வலியையும் போக்க வல்லது.

முருங்கை விதையைக் கூட்டு செய்து சாப்பிடலாம். இது மூளைக்கு நல்ல பலத்தை தரும். தாது விருத்தியை உண்டு பண்ணும். முருங்கை மரத்திலிருந்து கிடைக்கும் பிசின் நல்ல சத்து மருந்துகள் செய்ய பயன்படுகிறது. இளநரையை கட்டுப்படுத்தும் ஆற்றல் முருங்கை இலைக்கு உண்டு என்கிறார்கள் சித்த வைத்தியர்கள்.

கர்ப்பப்பையின் மந்தத் தன்மையை போக்கி, பிரசவத்தை துரிதப்படுத்தும். இதன் இலையை கொண்டு தயாரிக்கப்படும் பதார்த்தம், தாய்ப்பால் சுரப்பதை அதிகப் படுத்தும். ஆஸ்துமா, சளி போன்ற சுவாசக் கோளாறு களுக்கு முருங்கை இலை சூப் நல்லது. முருங்கைப் பூவைக் கொண்டு தயாரிக்கப்படும் சூப் ஆண், பெண் இருபாலரின் மலட்டுத் தன்மையை அகற்றும். முருங்கை இலை இரத்த விருத்திக்கும், விந்து விருத்திக்கும் சிறந்தது. முருங்கை இலைச்சாற்றுடன் எலுமிச்சை சாறு கலந்து தடவ முகப்பருக்கள் மறையும். முருங்கைகாய் இரு தயத்தை வலுப்படுத்துவதுடன், இருதய நோய்களை போக்கி இரத்தவிருத்தி தாதுவிருத்தி செய்யும். முருங்கை இலைச் சாறுடன் தேனும், ஒரு கோப்பை இளநீரும் கலந்து பருக மஞ்சள்காமாலை, குடலில் ஏற்படும் திருகுவலி, வயிற்றுப்போக்கு கட்டுப்படும். விதையில் இருந்து எண்ணெய் தயாரித்து வாயுப்பிடிப்பு, மூட்டுவலிகளில் பயன்படுத்தலாம். முருங்கைவேரில் இருந்து சாறெடுத்து பாலுடன் சேர்த்துப் பருகிவர காசநோய், கீழ்வாய், முதுகு வலி குணப்படும்.


**நிமிர்வு வாசகர்களே**

தொடர்புகளுக்கு...


தபால் முகவரி:
**தமிழ் ஊடகத் திரட்டு,**
**லக்சுமி கட்டிடம்,**
**ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,**
**கல்வியங்காடு,**
**யாழ்ப்பாணம்**

மின்னஞ்சல் முகவரி: nimirvueditor@gmail.com
தொலைபேசி இல : 021 223 2121


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏய்க்கும் வாழ்வு

நிமிர்வுகள் - 6




# நிலைக்கும் வாழ்வு

அவர்கள் உழைப்பார்கள்,
நாங்கள் உண்போம்...
அவர்கள் சேமிப்பார்கள்,
நாங்கள் கொள்ளையிடுவோம்...
அவர்கள் ஏமாறுவார்கள்,
நாங்கள் ஏமாற்றுவோம்...
அவர்கள் மடிவார்கள்,
நாங்கள் வாழ்வோம்...
புதிய வாழ்க்கைச் சித்தாந்தம் இது...

அனைத்துத் தட்டு மக்களும்
புதிய மொழி இது...
அவரவரின் வினைத்திறனுக்கேற்ப
விரிகிறது வேட்டை...
நெறிகளும் விழுமியங்களும்
பேசுபொருளாய் மட்டும்...

வழிதவறும் வருங்காலம்,
மாற்றுதல் கைகூடுமோ?

உண்ணும் உணவு, உடலில் சேர
உண்மையாய் உழைக்க வேண்டும்...
வாய் பேசும் சொல்லிற்கு,
செயல் வடிவம் கொடுக்கவேண்டும்...
எமக்கான எம்முடைய வாழ்வு
என்றும் சிறப்பானதே...
ஏற்றமோ, தாழ்வோ ஒப்பீடு தேவையில்லை..

எம் வாழ்வின் வெற்றிப்படிக்கட்டுகள்
ஒவ்வொன்றும்,
எம் கைகளால்,
நேர்மையாய் செதுக்கியதாய் அமையட்டும்...
வாழ்வின் சிறப்புகள்
என்றும் நிலைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிதைக்கப்படும் கலாச்சாரம்

வோல்டர் டெரி

### அறிமுகம்

"உன்னிடத்தில் மற்றவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறாயோ, அது போலவே நீ அடுத்தவரிடமும் நடந்து கொள்ள வேண்டும்" இதனையே கலாசாரம், பண்பாடு, நாகரீகம் என பெரியார் குறிப்பிடு கின்றார். இங்கு கலாசாரம் என்பது சமஸ்கிருத சொல். அதற்கு மாற்றான தமிழ்ச் சொல் தான் பண்பாடு. தமிழ் மொழியில் கலாசாரம், பண்பாடு என்ற இரண்டு சொற்களும் பரவலாக பயன்படுத்தப்படினும் ஆங்கிலத்தில் இவை இரண்டிற்கும் பொதுவாக Culture (Cultivating the Society) என்றே பயன்படுத்தப்படுகின்றது. கலாசாரம் என்பது பரந்த விடய மென்றும், அதில் உள்ளடங்கும் ஒரு பிரிவே பண்பாடு என் றொரு கருத்தும் உள்ளது. அதாவது இக்கட்டுரையில் கலாசாரம்-பண்பாடு இரண்டும் ஒன்று என்ற கருத்து நிலை யிலிருந்தே விடயங்கள் நோக்கப்படுகின்றன.

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள், "பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு மக்கட் கூட்டம் தனது சமூக, வரலாற்று வளர்ச்சியினூடாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதிகப் பொருட்கள், ஆத்மார்த்த கருத்துக்கள், மத நடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள், ஆகியவற்றினது தொகுதியாகும். பண்பாடு என்பது ஒரு கூட்டத்தினரின் தொழில்நுட்ப வளர்ச்சி நிலை, உற்பத்தி முறைமை, உற்பத்தி உறவுகள், கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், கலைகள், நம்பிக்கைகள், ஆகிய வற்றின் தொகுதியாகும்" என குறிப்பிடுகிறார். மேலும் விளக்க நிலையில் "பண்பாடு என்பது வெளிப்பார்வையில் ஒரு நடத்தை முறையாகவே தோன்றினாலும் உண்மையில் அது ஓர் அறிகை முறைமையே. பண்பாடு என்பது அந்த மக்கட் கூட்டத் தினரிடையே உள்ள சகலரும் பகிர்ந்து கொள்ளும் கருத்துக் கள், நடைமுறை உத்திகள், வழிநடத்து முறைமைகள் ஆகிய னவாகும். அதாவது உண்மையில் பண்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட குழுமத்திடையே அதன் அங்கத்தவர்கள் கொள்ளும் அர்த்தங்களுக்கான சூழமைவுகளைக் கொண்ட தாகும். பண்பாடு மனிதர்களைப் பக்குவப்படுத்துவது. ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை முறைக்கு அந்தக் குழுமத்தின் மக்களை இணைய வைப்பதுமாகும்".

அதாவது மனிதனானவன் தன்னை சுற்றியுள்ள மனிதர் களையும், உயிர்களையும் இயற்கைப் பொருட்களையும் தன் வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி அவற்றுக்குத் தன் வாழ்க்கையில் இடம் தந்து தன் இருப்பைப் புரிந்து கொள்வதே, வாழ்க்கையை அர்த்தப்படுத்திக் கொள்வது ஆகும். இந்த வாழ்க்கை அர்த்தப்படுத்தலானது கருத்துகள், நம்பிக்கைகள், நடைமுறைகளின் மூலம் வெளிப்படுத்தப்படும். இந்த வெளிப் படுத்தல்களின் தொகுப்பே விளக்க நிலையில் பண்பாடு என்கிறோம்.

வாழ்வின் அர்த்தம் பண்பாடு நிலையானது அல்ல. அது காலந்தோறும் மாற்றமடையக் கூடியது. மனிதனைச் சுற்றி யிருப்பவை மாறுவதால், அந்த மாறுதல்களோடு மனிதன் தன்னை இணைத்து வாழ்க்கையைப் புரிந்து கொள்வதும் மாறுகிறது. எனவே, மாற்றம் தவிர்க்க முடியாதது. அதாவது பண்பாடு என்பது தொழில்நுட்பம் வளர வளர வளரும். அர்த் தங்களும் மாறுபடும். தலைமுறை இடைவெளி ஊடாக இதனை அவதானிக்கலாம். மாற்றத்திற்கும், நெகிழ்வுத் தன்மைக்கும் உட்பட்டது தான் பண்பாடு என்ற வகையில், வெளிவடிவம் மாறினாலும் அடிப்படைத் தன்மை மாறாமல் இருக்கும் பண்புகளும் பண்பாட்டிற்கு உண்டு.

பண்பாடானது கருத்து நிலை தோன்றுவதற்கான தளமாகவும் இருக்கின்றது. எந்தவொரு பண்பாட்டுக்கும் அதற்குரிய அக அமைப்பையும், முழுமையையும் தந்து, அதனை உயிர்ப்புள்ள ஒன்றாக்குவது கருத்து நிலையே ஆகும். பண்பாடு என்பது வாழ்க்கை முறையினடியாக வருகின்றது. கருத்து நிலை என்பது பண்பாட்டைத் தளமாகக் கொண்டது. கருத்துநிலையே மனிதர்களின் மனோ பாவங்களையும் வாழ்க்கை நோக்கு களையும் தீர்மானிக்கின்றது.

### தேசியமும் பண்பாடும்

தேசியத்தின் பிரதான தூண்களில் ஒன்று என்ற வகையிலும் கலாசாரம் முக்கியத்துவம் பெறுகின்றது. காலங்காலமாக பின்பற்றப்பட்டு வரும் இக்கலாசாரம் ஒருதேசிய இனத்தின் வேராகவும் உள்ளது. இந்த தேசியம் தான் கூட்டுக் குழுமம் என்ற உணர்வை பேணுகிறது.

எமது இலங்கை சமூகத்தில் பண்பாடு தான் பிரதானமான தேசியத்தை வடிவமைக்கிறது. நகர, கிராமிய, தோட்டப்புறப் பண்பாடு, வேறு வேறு பாடசாலை பண்பாடு (இது ஆளுமை யில் செல்வாக்கு செலுத்துகிறது), குடும்ப பண்பாடு அரசியல் பண்பாடு, கட்சி அரசியல் பண்பாடு, பால் நிலை சார்ந்த பண்பாடு, ஊடகப் பண்பாடு (திட்டமிட்ட நுகர்வு பண்பாட்டை திணித்தல்) என்று அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

ஒரு சமூகத்தினுடைய உயிர்ப்பான அனைத்துக் கலங்களுடைய கூட்டுத் தொகுதிதான் பண்பாடு ஆகும். அந்த வகையில் பண்பாடானது சமூக இருப்பின் ஒரு அடையாளமாகவும், தேசியத்தை வடிவமைக்கும் பிரதான கூறாகவும் திகழ்கிறது. கூட்டு வாழ்க்கையும் கூட்டு அடையாளமும் தான் தேசியத்தின் அடிப்படைகளாகும். கூட்டு என்னும் போது அனைவரையும் ஒருங்கிணைக்கும் சக்தி அவசியமாகும். கலாசாரம் பண்பாடு ஒரு தேசிய இனத்தின் அனைவரையும் இணைக்கும் சக்தி யாகவும், இனத்துவ அடையாளத்தை வெளிப்படுத்தும் ஊடகமாகவும் விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கலாசாரம் பெரும்பாலும் எழுதப்படாத சட்ட மாகவே சமூகங்களில் காணப்படுகிறது. குறிப்பாக வாழ்க்கை முறை மற்றும் அதனுடன் தொடர்புடைய வாழ்க்கை முறையை தீர்மானிக்கின்ற காரணிகளான எண்ணங்கள், சிந்தனைகள், மொழி, கலைகள், இலக்கியங்கள், வழக்காறுகள் (வழமை) தொன்மங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், ஆன்மீக தொழிற் பாடுகள், மதம், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள், மரபுகள் உடை, அணிகலன்கள், பழக்க வழக்கங்கள், உறவுமுறைகள், உணவு முறை, விருந்தோம்பல், உபசரிப்பு, விளையாட்டுக்கள், பொழுது போக்கு அம்சங்கள், ஓவியம், சிற்பம், இசை, நாடகம், நாட்டியம், ஆடல், பாடல், கல்வி, அரசியல், சமூகம், பொருளா தாரம், மருத்துவம், விழுமியங்கள் என பண்பாட்டு வெளிப் பாடுகளின் பரப்பு விரிந்து காணப்படுகின்றது.

## மலையக தேசியமும் பண்பாடும்.

மலையகத் தமிழ் சமூகத்தில் பண்பாடு தான் தேசியத்தை வடிவமைக்கின்றது. மலையகம் இன்று தனி தேசியமாக வளர்ந்து வருகின்ற நிலையில் அதன் பண்பாட்டு விழு மியங்களின் பிரதான வெளிப்பாடாக தமிழ் மொழி உள்ளது. (மொழியும் பண்பாட்டின் ஒரு பகுதியே). மலையகத் தமிழ் தேசியத்தின் கலாசார வேர்கள் தமிழ்நாட்டுடன் தொடர்பு கொண்டவையாக உள்ளது.

சிங்கள பகுதிகளால் சூழப்பட்ட ஒரு தமிழ் மலையாகவே மலையகம் உள்ளது. மலையகத்தமிழ் தேசியத்தின் அல்லது மலையகத் தேசியத்தின் அடிப்படைகளில் ஒன்று என்ற ரீதியில் கலாசாரம்-பண்பாட்டு விழுமியங்களை விளங்கிக் கொள்ளல் அவசியமாகிறது. ஏனெனில் மலையகத் தேசியத்தினுடைய அடையாளமும், இருப்பும் இதில் தான் தங்கியுள்ளது.

மலையகப் பண்பாட்டுச் சூழலை ஆராய்கின்ற பொழுது இந்தப் பண்பாட்டை முன் நிறுத்தும் விழுமியங்களின் தோற்றம் பற்றி தெளிவாக கூற முடியாவிட்டாலும், அவை தென்னிந்திய ஆதி பண்பாட்டு விழுமியங்களின் தோற்றத்துடன் தொடர்புபட்டது என்பதை மட்டும் கூற முடியும். மலையக சமூகத்தின் ஆரம்ப கர்த்தாக்கள் தமிழ்நாட்டிலிருந்து வந்தவர்கள் என்ற ரீதியில் இந்தப் பண்பாடும் அவர்களுடன் இங்கு கொண்டு வரப்பட்டது. அத்துடன் மலையக சமூக உருவாக்கத்திற்கும் பங்களிப்புச் செய்துள்ளது.

இவர்கள் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்து மலையகத்தில் குடியேறியவர்கள் என்ற வகையில் அவர்கள் பல்வேறு கலாசாரங்களின் தொகுப்பையே இங்கு கொண்டு வந்தனர். மலையக வாழ்வியல் சூழலில் ஒரு தனித் துவமான பண்பாடு தோற்றம் பெற்றது. மலையை தெய்வமாக வழிபடும் முறையும் பெரும்பாலான பெருந்தோட்டமட்ட வழி பாட்டுக்குரிய தெய்வங்களின் வழிபாட்டு முறைமையையும் இதற்கு சிறந்த உதாரணமாக கூறலாம். இந்த இரண்டு பண் பாடுகளும் இணைந்து தான் இன்றைய மலையகப் பண்பாடாக எழுச்சி கொண்டுள்ளது.

ஒரு தேசிய இனமாக வளரும் போது அதன் தனித்து வத்தை பேணும் அரசியல் தேவையின் நிமித்தமும் மலையகப் பண்பாடு முக்கியத்துவம் பெறுகின்றது. கால ஓட்டத்திற் கேற்பவும், சூழலுக்கேற்பவும் மாற்றங்களை உள்வாங்கி இன்று மலையகமயமாகியுள்ள இத்தகையதோர் பண்பாட்டு வடிவத்தை வேறெந்த சமூக கட்டமைப்பிலும் தேட முடியாது. மலையக பண்பாட்டு-கலாசார விழுமியங்கள் தமது தனித்து வத்தை இன்றும் உயிர்ப்புடன் வைத்துள்ளன. இதுவே மலையகத் தேசியத்தின் முன்னோக்கிய பாய்ச்சலுக்கு இன்றும் துணை நிற்கின்றது. இந்த தனித்துவமான கலாசார பாரம்பரியத் தின் அங்கமாக இசைக்கருவிகள் (தப்பு, உடுக்கு, உறுமி, பறை, சங்கு, சேகண்டி, செஞ்சனகட்டை, தமுர், ஜல், ஜாலரா, குழித் தாளம், புல்லாங்குழல், ஆர்மோனியம், தபேலா, மிருதங்கம், கடம், தவில், மோசிங், செண்டை) என்பனவும் காமன் கூத்து, அருச்சுனன் தபசு, பொன்னர் சங்கர், முனியாண்டி கூத்து போன்ற கூத்து வடிவங்களும் இடம்பெறுகின்றன.

இந்த வலிமைமிகு கலாசார பாரம்பரியத்தில் தென்னா லிராமன், தேசிங்குராஜா, கட்டபொம்மன், கட்டபொம்மன் கதைப்பாடல், வள்ளிராசன் கதை, நல்லதங்காள் கதை, சித்திர புத்திர நாயனார் கதை, ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி, நளமகராசன் கதை, விக்கரமாதித்தன் கதை, ராஜா தேசிங்கு அல்லி அரசானி மாலை, பாண்டவர் வனவாசம், மின்சார மாயன், மன்னன் சின்னாண்டி போன்ற கதைகளும், சிலம்பாட்டம், கிளித்தட்டு, சடுகுடு, புள்ளையார் பந்து, பல்லாங் குழி, பட்டாக் கத்தி வீச்சு, பிடி வரிசை போன்ற விள்ளயாட்டுக் களும் இடம்பெறுகின்றன.

கரகம், காவடி, அன்னக்காவடி, பரவக்காவடி, பன்னீர் காவடி, புஷ்ப காவடி, சந்தனக்காவடி, வேல்காவடி, கோவில் காவடி, கும்மி, ஒயல்கும்மி, ஒயிலாட்டம், கோலாட்டம், மொம்மலாட்டம், தோற்பாவை ஆட்டம், வேடன் புலி ஆட்டம், பொய்க்கால் ஆட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், பபூன்-கோமாளி ஆட்டம், டிங்கி டிங்கி ஆட்டம், என்பன ஆட்டக்கலை பிரிவில் இடம்பெறுகின்றன. பின்வரும் பாடல் வடிவங் களையும் கலாசார விழுமியங்களில் காணக்கூடியதாக வுள்ளது. தாலாட்டு-ஒப்பாரி (பிறப்பு முதல் இறப்பு வரை யான பாடல்கள்) லாவணி, மாரியம்மன், தாலாட்டு, உடுக்கடிப் பாடல், தேர்ப்பாடல், பூசாரிப்பாடல், காமன் கூத்து பாடல், மாரடிப்பு பாடல், பபூன்-கோமாளி பாடல், தெம்மாங்கு பாடல், வெட்டியான்-வெட்டியச்சிப் பாடல், தொழில் பாடல் என பாடல் வடிவங்கள் விரிந்து செல்கின்றன.

லங்கா தகனம் (கண்டி ராசன் கதை), ராமாயணம், சத்தியவான் சாவித்திரி, குலேபகாவலி, அரிச்சந்திரன் மயான காண்டம், அர்ச்சுனன் தபசு, நந்தினி சரித்திரம், மதுரை வீரன், பொன்னர் சங்கர் போன்ற நாடக வடிவங்களும், பூ கட்டி பார்த்தல், பூப்பு சடங்கு, சாவு சடங்கு, பேய்-பிசாசு விரட்டுதல், மந்திர சடங்கு, நேர்த்திக்கடன், திருஸ்டி சுத்துதல், திருமணச் சடங்கு, காது குத்து போன்ற சடங்கு முறைகளையும் இங்கு காண முடியும்.

மலையகத்தில் வழிபாட்டிற்குரிய கடவுள்களை பொதுவான வழிபாட்டிற்குரிய தெய்வங்கள், பெருந் தோட்ட வழிபாட்டு தெய்வங்கள், (தொழில் சார்ந்தது, தொழில் சாராதது) கொடூரமான தெய்வங்கள், அவமதிப்பவர்களுக்கு தண்டனை கொடுக்கும் தெய்வங்கள், என்ற பிரிவுகளுக்குள் அடக்கலாம். பொதுவான வழிபாட்டுக்குரிய கடவுள்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் (வேறுபெயர்களிலும் அழைப்பர்) மாரியம்மன், (வேறுபெயர்களும் உள்ளன). கிருஸ்ணன், மதுரை வீரன், விநாயகர், காளியம்மன், பத்தினி ராமர், அனுமான், பாலதண்டாயுதபாணி, விஷ்ணு, காயத்திரி, வைரவர், புத்தர், இயேசு, அன்னை மரியாள் போன்ற தெய்வங்கள் விளங்கு கின்றன.

பெருந்தோட்ட மட்டத்தில் தொழில் சார்ந்த தெய்வங்களாக ரோதமுனி, தவறணை முனி, கம்பி முனி, தன்னை முனி, கொழுந்து சாமி, மட்டத்து சாமி என்பனவும், தொழில் சாராத தெய்வங்களாக கந்தசாமி, மாடசாமி, மதுரை வீரன், காளி ராமர், சந்திமுனி, முச்சந்தி முனி, எல்லை முனி, இரட்டை கல் முனி, காட்டு முனி, மகா முனி, காட்டேரி அம்மன், முனீஸ்வரன், வன்னடியான், வண்ணாத்திக் கோட்டை, உத்திரை காளி, வீரமா காளி, மஞ்சள் காளி, வட பத்திரகாளி, பத்திரகாளி, இருளாய், ஆண்டி சாமி, பூச்சி அம்மா, சங்கிலி கருப்பன், கருப்பன சாமி, முன்னடியான், ஆண்டி அப்பர், பிள்ளையார், இடும்பன், வைரவர், சென்டா கட்டி, நொண்டி அப்புச்சி, காமாச்சி, துர்க்கா தேவி, மஞ்சள் சாமி, வன தேவதை, பட்டமரத்தான் போன்ற தெய்வங்களும் உள்ளன. மேலும் வனத்து சின்னப்பர், சின்னப்பர், பெரியப்பர், வால் ராசா, காட்டு சின்னப்பர் என்பனவும் தொழில் தெய்வங்களாக உள்ளன.

மேலும் மலையகத்தில் காணப்படுகின்ற குடும்பம் பற்றிய எண்ணக்கரு, திருமண முறைகள், உணவு பழக்கவழக்கங்கள், பாரம்பரிய மருந்துகள், மற்றும் நோய் பற்றிய எண்ணக்கரு, சமூக ஒருங்கிணைப்பில் ஆடைகளின் பங்கு, மரபு வழிக் கல்வி மற்றும் பாரம்பரிய தொழிற்பயிற்சிகள், இலக்கியம், வெகுசன தொடர்புகளின் பங்கு என்பனவும் மலையகத் தமிழரின் பண்பாட்டை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

உளவியல் விடயத்திலும் பண்பாட்டிற்கும் முக்கிய பங்கு உண்டு. உதாரணமாக மலையகத்தில் காணப்படுகின்ற சாமி பார்த்து நூல் கட்டுதல், திருஷ்டி கழித்தல் (திட்டி சுத்துதல்) என்பன சரிபிழை என்பதற்கு அப்பால் அது ஒரு பண்பாடாகவே காணப்படுகின்றது.

ஆங்கிலேயரின் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் முழு மலையகமும் திறந்த வெளிச்சிறைக்கூடமாக காணப்பட்டது. எந்தவொரு விடயமும் பெருந்தோட்ட உற்பத்தி முறையை பாதிக்கக் கூடாது என்பதில் ஆங்கிலேயர்கள் கவனமாக இருந்தனர். இதற்காக தோட்டத் தொழிலாளர்கள் வெளித் தொடர்புகளிலிருந்து விலக்கியே வ்வக்கப்பட்டனர். மேலும் மதச் சுதந்திரம் வழங்குவதனூடாக வெளியுலகத் தொடர்பை குறைக்கலாம் என்பதனாலும், அது உற்பத்தி முறையை பாதிக்காது என்பதாலும் மதச்சுதந்திரம் தோட்டத் தொழிலாளர் களுக்கு வழங்கப்பட்டது.

இந்த மதச் சுதந்திரத்தை மலையக மக்கள் தமக்கு சாதக மாக்கிக் கொண்டனர். இதனூடாக மலையகத்தமிழரின் நம்பிக் கைகள், சடங்குகள், விழாக்கள், பண்டிகைகள், கூத்துக்கள், கலைகள், இலக்கியம், பொழுது போக்கு நடவடிக்கைகள், விளையாட்டுக்கள், கிரியைகள் போன்றவை தொடர்ந்தும் பேணுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டன. இதனூடாக மலையகத் தமிழ் மக்களுடைய தனித்துவமான பண்பாட்டுப் பாரம்பரியம் ஒன்றினை கட்டியெழுப்புவதற்கான ஏற்ற சூழல் அமையப் பெற்றது.

## மலையகப் பண்பாட்டிற்கான நெருக்கடிகள்

இந்த சாதகமான சூழல், சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலத்தில் குறிப்பாக 1972 ஆம் ஆண்டு பெருந்தோட்டத்துறை தேசிய மயமாக்கப்பட்ட பின் படிப்படியாக மாற்றம் காணத் தொடங் கியது. ஒரு சமூகத்தினுடைய அடையாளமும், இருப்பும் பண்பாட்டில் தான் பிரதானமாக தங்கியுள்ளது. இதனால் தான் அடக்குமுறை ஆட்சியாளர்களினால் பண்பாட்டை திட்டமிட்டு அழிப்பதனூடாக ஒரு இனத்தை அழிக்கலாம் என்ற எண்ணப் பாடு பின்பற்றப்பட்டு வருகிறது. மலையக வரலாற்றிலும் இந்த நிலையை அவதானிக்கலாம்.

கூட்டிருப்பு தான் வாழ்க்கையை தீர்மானிக்கின்றது என்ற வகையில் கூட்டு வாழ்க்கை இருக்கும் வரையில் தான் தனித் துவமான பண்பாட்டைப் பேணமுடியும். அந்த வகையில் மலையகப் பண்பாட்டு வளர்ச்சிக்கான ஏற்ற சூழல் தொடர்ந்து வந்த அரசாங்கங்களினால் திட்டமிட்ட வகையில் இல்லாது செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இன்று மலையகத் தமிழரின் பண்பாட்டு விழுமியங்கள் பல்வேறு வழிகளினூம் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன.

### அக நெருக்கடிகள்

- **நுகர்வு கலாசாரம் காரணமாக உலகத்தில் ஆதிக்கம் செலுத் தும் கலாசாரத்தை நோக்கி மலையக கலாசாரம் தள்ளப்படு தல்.**
- **பொதுவான இந்திய சினிமா போன்ற ஜனரஞ்சக கலாசாரம் மேலோங்கி வருவதனால் கூத்து, நாடகம் போன்ற மலையக கலாசார அம்சங்களின் வளர்ச்சி தடுக்கப்பட்டுள்ளது.**
- **தென்னிந்திய தமிழ் சினிமா மற்றும் தொலைக்காட்சி நெடும் தொடர்கள் மக்களை நுகர்வு கலாசார ஆசைக்குள் வைத்தி ருப்பதனால் மலையக மக்கள் தங்கள் சுய கலாசார விழுமி யங்களை பாதுகாப்பதிலிருந்து விலகிச் செல்லும் நிலை காணப்படுகின்றது.**
- **இலங்கையில் காணப்படுகின்ற பெரும் ஊடக கலாசாரம் காரணமாக மலையக கலைஞர்களின் உழைப்பும், ஆற்றலும் சூறையாடப்படுகின்றது.**
- **சில கலாசார விடயங்களை சாதி சடங்குகளாக பார்க்கின்ற போக்கு காரணமாக அவைகள் அழிந்து வருகின்றன.**
- **கலாசாரத்தின் சில பிற்போக்கான கூறுகளினாலே ஒட்டு மொத்த கலாசாரத்தையே மக்கள் ஒதுக்குகின்ற நிலைமை.**
- **பெண் அடிமைத்தனம் மற்றும் சடங்குகளில் சாதிகள் வகிக் கும் பங்கு – உதாரணமாக மரண சடங்குகளில் பெண்களின் தாலியை கழற்றும் விடயம்.**
- **கூட்டு நிலையிலிருந்து தனி மனித பண்பாட்டு நிலைக்கு மாறு தல், படித்த சிலர் சமூகத்திலிருந்து தங்களை துண்டித்து, தாங் கள் சமூகத்திற்கு ஏதோ செய்வதாக காட்டும் பண்பாட்டு நிலை.**
- **மலையகத்திலுள்ள கோவில்கள் பிரமான ஆகம மயப்படுத் தப்படுதல், இதனால் மலையகத் தமிழரின் குல தெய்வ வழி பாட்டு முறைகளை நாகரீகமற்றவையாக பார்க்க மக்களை தூண்டுதல்.**
- **குருஜீ, சாயிபாபா, அம்மா பகவான், சபரிமலை யாத்திரை என தொடரும் மாற்று வழிபாட்டு முறைகள் இந்திய**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலிருந்து கொண்டு வரப்பட்டு திணிக்கப்படுவதனால் (இதை ஒரு புதிய நாகரீகமாக பார்க்கும் போக்கு) மலையகத் தமிழரின் சுய வழிபாட்டு முறைகளை கேலிக்கூத்தாக்குதல்.

- இஸ்லாமிய மயமாக்கலும், கிறிஸ்தவ மதமாற்ற குழுக்களும் மதமாற்ற நடவடிக்கைகள் மூலம் மலையகத் தமிழரின் தனித்துவமானவை பண்பாட்டினை பொய்த் தன்மை யானவை என போதிப்பதால் மலையகத் தேசிய இனம் அழிவை நோக்கி செல்கிறது.
- மலையகத் தோட்டங்களில் கோவில் திருவிழாக்களின் போது நிதி உதவிகளை செய்யும் கசிப்பு முதலாளிமார் மற்றும் ஏனைய சமூக விரோத சக்திகள் கசிப்பு மற்றும் சட்ட விரோத மதுபானம், போதைப்பொருள் என்பவற்றை விற்பதற்கான களங்களாக திருவிழாக்களை பயன்படுத்துவதால், திரு விழாக்களின் கலாசார மகிமை மழுங்கடிக்கப்படுகின்றது.
- மலையகத்தில் மது, போதைப்பொருட்களை விநியோகிக்கும் சமூக விரோத சக்திகளின் சமூக விரோத செயற்பாடு களினால் இளைஞர், யுவதிகளின் சிந்தனை சக்தி மழுங் கடிக்கப்படுகின்றது.
- தேர்தல் காலங்களில் மலையகத்தில் மேற்கொள்ளப்படும் மதுபான விநியோகமும் பண்பாட்டு ரீதியான ஒரு ஒடுக்கு முறையேயாகும். இதனூடாக மலையக மக்களை சிந்திக்க விடாமல் தடுக்கப்படுகிறார்கள். சிந்தித்தால் தான் பகுத்தறிவு வளர கேள்வி கேட்கும் நிலையும் வளரும், இதனைத் தடுப்ப தற்காகவே மதுபான விநியோகம் செய்யப்படுகிறது.
- இந்திய சார்புடைய அரசியல்வாதிகளின் செயற்பாடுகளும், சலுகைகளையும் அதிகாரங்களையும் மட்டுமே எதிர்பார்ப் பாக கொண்ட மலையக அரசியல்வாதிகளின் செயற் பாடுகளும் மலையக மக்களை தேசிய இனமாக சிந்திப்பதற்கோ, வளர்வதற்கோ இடம்கொடுப்பதில்லை.

### புற நெருக்கடிகள்

- மலையகத் தமிழரின் பண்பாட்டு விழுமியங்களை பேணு வதற்கும், வளர்ப்பதற்கும் அரசாங்க உதவிகள் கிடைக்கப் பெறுவதில்லை.
- கல்வியில் மலையகத் தமிழரின் வரலாறு, கலாசாரம் பற்றி பாடவிதானங்களில் கவனம் செலுத்தப்படவில்லை.
- மலையகத்தில் அரசாங்கம் திட்டமிட்ட முறையில் நடை முறைப் படுத்தும் கட்டாயக் கருக்கலைப்பை பல அரச சார்பற்ற நிறு வனங்களும் ஊக்கவிப்பதில் தீவிரமாக செயற்படுகின்றன.
- ஸ்ரீமா–சாஸ்திரி, ஸ்ரீமா–இந்திரா ஒப்பந்தங்கள் மூலம் ஐந்து இலட்சம் மலையகத்தமிழர்கள் கட்டாயத்தின் பேரில் இந்தி யாவிற்கு நாடு கடத்தப்பட்ட போது பல்துறை சார்ந்த கலை ஞர்களும், புலமையாளர்களும் புலம்பெயர் நிலை ஏற்பட் டமை.
- பொருளாதாரச் சூழல் காரணமாக கலைஞர்கள் வேலை வாய்ப்புத் தேடி வெளி இடங்களுக்கு வெளியேறுகின்ற நிலைமை காரணமாக மலையக கலைகளை வளர்க்க முடி யாதுள்ளது.
- இலங்கையின் சிங்கள கிராமிய, நகர பண்பாட்டு கூறுகள் மலையகப் பண்பாட்டில் செலுத்தும் செல்வாக்கு.
- வன்முறைகளின் மூலம் புலமைசார் கலைஞர்கள் மற்றும் பண்பாட்டுக் காவலர்கள் மலையகத்தை விட்டு வெளியேறும் ஒரு சூழல் உருவாக்கப்பட்டது.
- ஜனநாயகம் என்ற போர்வையில் அரச அங்கீகாரத்துடனான (நேரடி–மறைமுக) பௌத்த விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் மலையகத்தமிழரின் கூட்டிருப்பு சிதைக்கப்படுகிறது. உதாரணமாக காணி சுவீகரிப்பு, மற்றும் புதிய விகாரைகள், புத்தர் சிலைகளை நிர்மாணித்தல் மூலமாக ஒரு பய உணர்வு ஊட்டப்பட்டு மலையகத் தேசிய இனம் அழிவை நோக்கி தள்ளப்படுகிறது.

### பொதுவான நெருக்கடிகள்

- கலைகளை வளர்ப்பதிலும், காட்சிப்படுத்துவதிலும் ஏற்படும் பொருளாதார சுமை (செலவு) கலைகளின் வளர்ச்சியை பாதித்துள்ளது.
- சில அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் மலை யக பாரம்பரிய கலைகளை கலைஞர்களை அநாகரிகமாக பார்க்கும் ஒரு நிலை உருவாகியுள்ளது.

## தீர்வுகள்

இவ்வாறான நெருக்கடிகளிலிருந்து மலையக கலாசார–பண்பாட்டு விழுமியங்களை பாதுகாப்பதனூடாகவே எதிர்காலத்தில் மலையகத் தேசியத்தை பாதுகாப்பதுடன் அதை ஒரு வளர்ச்சி நிலைக்கு கொண்டு செல்லலாம். அதற்காக பின்வரும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் அவசிய மாகும்.

- கலாசாரத்தை மீள் உருவாக்கம் செய்தல் வேண்டும். மீள் உருவாக்கம் செய்யும் போது கலாசாரத்தின் பிற்போக்கான (மோசமான) கூறுகளை நீக்கி, வேர்கள் அறாமல் மேலும் விருத்தி செய்தல் வேண்டும்.
- மலையக கலாசார பாரம்பரியங்களை வளர்ப்பதற்கான அரச உதவிகள் (அதிகாரம்) உறுதிப்படுத்தப்பட வேண்டும். அது வரை உடப்பு பிரதேசத்திலுள்ளது போன்ற ஒரு சமூக அதிகார மையத்தினூடாக கலாசார பாரம்பரியங்களை பாதுகாத்தல் வேண்டும்.
- மலையகத்திலுள்ள கோவில்கள் வெறுமனே வழிபாட்டு மையங்களாக மட்டும் இல்லாமல் ஒரு கலாசார மையமாக வும், சமூக நிறுவனமாகவும் மாற்றப்பட வேண்டும். அதனை கிறிஸ்தவ, பௌத்த, இஸ்லாமிய வழிபாட்டு தலங்களில் நாம் அவதானிக்கலாம்.
- மலையக கலை, கலாசார பண்பாட்டு காப்பகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.
- கலாசாரத்தை பேணிப் பாதுகாப்பதில் பல்கலைக்கழகத் திற்கு பாரிய பங்குண்டு, மலையகத்தில் பல்வேறு பிரதேசங் களிலுள்ளவர்களையும் வெளியிலுள்ளவர்களையும் ஒன்று சேர்க்கக்கூடிய விதத்தில் மலையகத்திற்கான பல்கலைக் கழகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.
- மலையகத் தமிழ் மக்களை ஒரு தனித் தேசிய இனமாக அங்கீகரித்தல் வேண்டும். முதலில் பல்வேறு சமூக மட்டங் களில் மலையக மக்களை தேசிய இனமாக அங்கீகரிக்கின்ற நிலை உருவாக வேண்டும்.
- மலையக மக்கள் சுயமாகவே தங்களை ஒரு தேசிய இனமாக அடையாளப்படுத்துகின்ற சிந்தனை உருவாக்கத்தில் சமூக அமைப்புகள் ஈடுபட வேண்டும்.
- மேற்குறிப்பிட்டவற்றை நடைமுறைப்படுத்துவதனூடாகவே மலையகத்தமிழரின் கூட்டிருப்பை பேணி பண்பாட்டு விழு மியங்களை பாதுகாக்க முடியும். அதனூடாகவே மலையகத் தேசியத்தை பாதுகாக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளில் மீதமாகும் உணவை எம்மிடம் ஒப்படையுங்கள்:

## கோருகிறது விண்மீன்கள் அமைப்பு







உலகில் தினமும் 85 கோடி மக்கள் பசியோடு படுக்கைக்கு செல்கிறார்கள். அதனைவிட மோசம், போர் ஓய்ந்த நம் தமிழர் பகுதிகளில் முழு நாளையுமே பட்டினியோடு ஏராளமானோர் கழிக்கின்றனர். இதனை கொஞ்சமாவது குறைக்கும் உன்னத நோக்கோடு இளைஞர்களின் பேராற்ற லுடன் பயணிக்கிறது விண்மீன்கள் அமைப்பு.

உணவை வீணாக்காதீர்கள் என்கிற கோஷத்தோடு, பொது நிகழ்வுகளில் உணவு பழுதாகு முன் காலம் தாழ்த்தாது எம்மிடம் ஒப்படையுங்கள். நாங்கள் அவற்றை கூடிய விரைவில் எடுத்துச் சென்று பசித்திருப்பவர்களிடம் வழங்கத் தயார் என்று துடிப்புள்ள இளைஞர் பட்டாளமே களமிறங்கியுள்ளது.

அதன் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான புவி கரனுடன் பேசிய போது, எனது நண்பனின் தங்கச்சியின் திருமண வீட்டுக்கு சென்றிருந்த போது தான் இப்படி ஒரு ஐடியா தோன்றியது. அந்த திருமண நிகழ்வில் 200 இற்கும் மேற்பட்ட சாப்பாடுகள் மிஞ்சி விட்டன. மண்டபக்காரர்களும் 3 மணிக்குள் பாத்திரங்களை எல்லாம் கழுவிக் கொடுத்து மண்டபத்தை விட்டு விட வேண்டும் என நெருக்கடி கொடுத்தார்கள். சாப்பாட்டை வீணாக்காமல் யாராவது பசியோடு இருப்ப வர்களுக்கு கொடுத்து விட வேண்டும் என நினைத்து தேடினோம். இறுதியில் கன்னியாஸ்திரிகளால் நடாத்தப்படும் இல்லம் ஒன்றுக்கு சென்று வழங்கினோம். அன்று தொடங்கியது இந்தப் பயணம்.

ஏராளமான நிகழ்வுகளின் போது மீதமாகும் உணவை அநியாயமாக வெளியில் கொட்டுகிறார்கள். இளைஞர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு குழுவாக இயங்கி மீதமாகும் சாப்பாடு களை பொதி செய்து உணவுக்காக கஷ்டப்படும் மக்களுக்கு ஏன் நேரில் கொடுக்கக் கூடாது, என்கிற எண்ணம் குறித்த நிகழ்வின் பின்பு தான் எமக்கு தோன்றியது. முதலில் நண்பர்களின் தொடர்புகளுக்கூடாக நிகழ்வுகளின் போது எஞ்சும் சாப்பாடுகளை வாங்கி பொதி செய்து ஏழை எளிய மக்களுக்கு நேரில் சென்று கொடுக்கும் பணியை கடந்த ஆறாம் மாதமளவில் வவுனியாவில் தொடங்கினோம். முதலில் வவுனியா நகரை சூழவுள்ள இடங்களில் உணவின்றி வாடும் ஆதரவற்றவர்கள், வயதானவர்கள் என்று தேடி தேடிச் சென்று உணவை வழங்கினோம். இந்தப் பணிக்கு நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் ஆதரவு பெருகியது.

அப்போது தான் வவுனியாவில் மட்டும் இவ்வளவு உணவு மிச்சமாகிறது என்றால் வடக்கு கிழக்கு முழுவதும் எவ்வளவு உணவு மிச்சமாகும்? இதனை எப்படி வினைதிறனுடன் செயற்படுத்துவது என்கிற கேள்வி எழுந்த போது ஒவ்வொரு பிரதேசத்திலேயும் இணைப்பாளர்களை வைத்திருந்து அவர்கள் மூலம் இந்த வேலையை இலகுவாக செய்து முடிக்கலாம் என்கிற எண்ணம் வந்தது. அதனடிப்படையில் கடந்த மாதம் நண்பர் களுடன் ஆலோசித்து பணமாக யாரிடம் இருந்தும் வாங்குவ தில்லை என்கிற கொள்கையுடன் விண்மீன்கள் என்கிற தன்னார்வ அமைப்பை உருவாக்கினோம். அதனை பதிவு செய்யும் நடவடிக்கை கள் இடம்பெற்று வருகிறது. வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத் துக்கு எங்கள் பணியை விஸ்தரித்த 3 நாட்களில் 5 இடங்களில் இருந்து சாப்பாடு எஞ்சியிருந்ததாக தகவல் வந்தது. அதனை இங்குள்ள குடிசை வாழ் மக்களுக்கு விநியோகம் செய்தோம். இப்போது பருவ மழை அடைமழையாக தொடர்ந்து வருவதால் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் உள்ள முகாம்களின் குடிசைகளைச் சூழ வெள்ள நீர் தேங்கியுள்ளதால் அம் மக்கள் உணவுக்கும் வழியில்லாமல் உணவு சமைக்க விறகுக்கும் வழியில்லாமல் அல்லல்பட்டு வருகின்றார்கள். அவர்களுக்கு சமைத்த உணவை, வழங்க வேண்டியுள்ளது. கிழக்குக்கும் எங்கள் பணிகளை விரைவில் விஸ்தரிக்கவுள்ளோம்.

எமது இளம் சந்ததியினர் எம் இனத்தின் மீதும் சமூகத்தின் மீதும் அக்கறையின்றி திரிகிறார்கள் என்ற பலரது குற்றச்சாட்டுக்களைப் பொய்ப்பித்திருக்கிறார்கள் விண்மீன்கள் அமைப்பினர். இவ்வாறான சிறிய முயற்சிகளூடாக விதைக்கப்படும் மாற்றங்களே பின்னர் பெரிய அளவில் சமூக மாற்றத்துக்கு வழிகோலுபவையாக அமைந்ததை பல சமூகங்களின் வரலாற்றில் நாம் காணலாம். இவ்வமைப்பில் மேலும் பல இளைஞர்கள் இணைய வேண்டும். போரினால் அடிபட்டு வீழ்ந்து கிடக்கும் எம்மினத்தை மீண்டும் தூக்கி நிறுத்த இது போன்ற அமைப்புகள் வளர வேண்டும்.

வாழ்த்துக்கள் நண்பர்களே!

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினால் 14.11.2017 அன்று ஜெயசிறீ அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org